இலங்கையில் இணைந்த சுகாதார தொழில்வல்லுநர்களின் ஒழுங்குறுத்துகை, தராதரங்கள் மற்றும் நடைமுறைகளை மேற்பார்வை செய்வதற்கு இந்தக் குழு பொறுப்பாக உள்ளது. இணைந்த சுகாதார தொழில்வல்லுநர்களில் பிசியோதெரபிஸ்டுகள், ரேடியோகிரா:பர்கள், ஆய்வக தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் தொழில்சார் சிகிச்சையாளர்கள் போன்ற மருத்துவர்கள் மற்றும் தாதியர்கள் போன்ற வேறுபட்ட சுகாதாரப் பணிகளில் பணிபுரியும் நபர்கள் அடங்குகின்றனர். இணைந்த சுகாதார தொழில்வல்லுநர்கள் குறிப்பிட்ட கல்வி, நெறிமுறை மற்றும் நடைமுறை தராதரங்களை பூர்த்தி செய்திருப்பதை உறுதி செய்வதே குழுவின் பணியாகும்.

பேராசிரியர் வஜிர எச்.டபிள்யூ. திசாநாயக்க
(தலைவர்)
சிரேட்ட பேராசிரியர் டி.பி.வீரரத்ன
பேராசிரியர் சுரங்கி யசவர்தன
பேராசிரியர் வசந்தி பின்டோ
பேராசிரியர் ஆர்.சுரேந்திகுமாரன்
டாக்டர் சஞ்சீவ போவத்தே
டாக்டர் ஹரித அலுத்கே
டாக்டர் தர்ஷன சிறிசேன
டாக்டர் சண்டிக எபிடகடுவ
டாக்டர் தேனுவன் விக்கிரமசிங்க

**மன்ற நிர்வாகம்**
டாக்டர் எச். டி. பி. ஹேரத்
(பதிவாளர்)
திருமதி. அனுஷா சபாநாதன்
(உதவிப் பதிவாளர்)

## 17. கணக்காய்வுக் குழு

இந்தக் குழு நிதி அறிக்கையிடல், கணக்காய்வு செயல்முறைகள் மற்றும் மன்றத்தின் உள்ளக கட்டுப்பாடுகளை மேற்பார்வையிடுவதற்கு பொறுப்பாக உள்ளது. நிறுவனத்தின் நிதி நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் நேர்மையை உறுதி செய்வதே இதன் முதன்மைப் பணியாகும்.

திரு. டி.எம்.வீரசேகர
(தலைவர்)
திரு. பி. ஜி. தர்ஷனா
(உதவி கணக்காய்வாளர் நாயகம்
(அவதானிப்பாளர்)
பேராசிரியர் ஜயந்த ஜயவர்தன
டாக்டர் சுரேஷ் சண்முகநாதன்
டாக்டர் பண்டார வரகாகொட
டாக்டர் சந்தன தர்மரத்ன
டாக்டர் லாநிதி தேனுவன் விக்கிரமசிங்க
டாக்டர் சண்டிக எபிடகடுவ

**மன்ற நிர்வாகம்**
டாக்டர் எச். டி. பி. ஹேரத்
(பதிவாளர்)
திருமதி. அனுஷா சபாநாதன்
(உதவிப் பதிவாளர்)
திருமதி ஏ.வைத்தியரத்ன
(தலைவர்-நிதிப்பிரிவு )

## 18. கட்டடக்குழு

இந்தக் குழு, மன்றத்தின் தொழிற்பாடுகளுடன் தொடர்புடைய பௌதீக உள்கட்டமைப்பின் திட்டமிடல், அபிவிருத்தி, பராமரிப்பு மற்றும் முகாமைத்துவம் ஆகியவற்றை மேற்பார்வையிடும் பணியை மேற்கொள்கிறது. இதில் SLMC இன் வசதிகள் தொழிற்பாட்டுத்தன்மை, பாதுகாப்பு மற்றும் ஒழுங்குறுத்துகை தேவைப்பாடுகளுடன் இணங்குவதற்கான தேவையான தராதரங்களைப் பூர்த்தி செய்வதை உறுதி செய்வதும் அடங்கும்.

பேராசிரியர் வஜிர எச்.டபிள்யூ. திஸாநாயக்க
(தலைவர்)
டாக்டர் பண்டார வரகாகொட
டாக்டர் ஜனக ராஜபக்ஷ
டாக்டர் சண்டிக எபிடகடுவ
டாக்டர் சுரேஷ் சண்முகநாதன்

**மன்ற நிர்வாகம்**
டாக்டர் எச். டி. பி. ஹேரத்
(பதிவாளர்)
திருமதி. அனுஷா சபாநாதன்
(உதவிப் பதிவாளர்)

## 19. மீள்மதிப்பீட்டுக் குழு கூட்டங்கள்

தேசிய தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தி (CPD) திட்டத்தை வினைத்திறனுடன் செயல்படுத்துவதையும் மேற்பார்வையிடுவதையும் உறுதி செய்வதில் மறுமதிப்பீட்டுக் குழு முக்கிய பங்கு வகிக்கிறது. சுகாதார அமைச்சினால் வழிநடத்தப்படும் இந்த முயற்சி, பரந்த அளவிலான பங்குதாரர்களுடன் இணைந்து மேற்கொள்ளப்படுகிறது. தொழில்சார் அபிவிருத்தியின் தராதரங்களை எளிதாக்குதல், கண்காணித்தல் மற்றும் பராமரித்தல், சுகாதார வல்லுநர்கள் தேசிய மற்றும் சர்வதேச சிறந்த நடைமுறைகளுக்கு ஏற்ப தங்கள் அறிவு மற்றும் திறன்களை தொடர்ந்து மேம்படுத்துவதை உறுதி செய்தல் ஆகியன குழுவின் பொறுப்பாகும்

பேராசிரியர் வஜிர எச். டபிள்யூ. திசாநாயக்க
(தலைவர்)
டாக்டர் எம். ஏ. எஸ். சி. சமரக்கோன் (பிரதி பணிப்பாளர் நாயகம்)
(கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சி) - சுகாதார அமைச்சு
டாக்டர் சமந்த ரணசிங்க (பணிப்பாளர் /பயிற்சி)
- சுகாதார அமைச்சு

**மன்ற நிர்வாகம்**
டாக்டர் எச். டி. பி. ஹேரத்
(பதிவாளர்)
திருமதி. அனுஷா சபாநாதன்
(உதவிப் பதிவாளர்)

## 20. மருத்துவ மற்றும் பல் மருத்துவக் கல்விக் குழு

மருத்துவ மற்றும் பல் மருத்துவக் கல்வித் தராதரங்களைப் பராமரிப்பது SLMC-யின் பணியாகும். கொள்கை இடைவெளிகள் மற்றும் காலாவதியான சட்ட கட்டமைப்புகள் காரணமாக அண்மைய போக்குகள் நோயாளிகளின் பாதுகாப்பிற்கு ஆபத்தை ஏற்படுத்துகின்றன. குறிப்பாக பாராளுமன்றத்தால் நோயாளர் பாதுகாப்பு சாசனம் அங்கீகரிக்கப்பட்ட பின்னர், தகவல் தொழில்நுட்பம் மற்றும் சமூக ஊடகங்களில் ஏற்பட்டுள்ள துரித முன்னேற்றங்கள் விரைவான நடவடிக்கையைக் கோருகின்றன. தற்போது, மருத்துவ மற்றும் பல் மருத்துவக் கல்வியின் எதிர்காலத்தை வழிநடத்த SLMC-க்குள் எந்த ஒரு பிரத்யேக பொறிமுறையும் இல்லை. கொள்கை அளவிலான பிரச்சினைகளைத் தீர்க்கவும் பரிந்துரைகளை வழங்கவும் ஒரு சிறப்புக் குழுவை நிறுவுவது மிக முக்கியமானதாகும்.

பேராசிரியர் வஜிர எச்.டபிள்யூ. திஸாநாயக்க
(தலைவர்)
பேராசிரியர் மனோரி கமகே
பேராசிரியர் சுரங்கி யசவர்தன
பேராசிரியர் மாதவ சந்திரதிலக
பேராசிரியர் பி.எம்.எச்.எஸ்.கே

பேராசிரியர் மஞ்சுளா ஆட்டிகல
டாக்டர் எஸ்.சண்முகநாதன்
டாக்டர் D. S. சமரவீர
டாக்டர் சண்டிக எபிடகடுவ
**மன்ற நிர்வாகம்**
டாக்டர் எச். டி. பி. ஹேரத்

## 21. ஒழுக்கநெறி குழு

தொழில்சார் மற்றும் மருத்துவ நெறிமுறைகள் தொடர்பான அனைத்து விடயங்களையும் கையாள்வதற்கு ஒழுக்கநெறி குழு பொறுப்பாகவுள்ளது. ஒழுக்கநெறிமுறை தராதரங்களை வரையறுத்தல், வழிகாட்டுதல்களை விருத்திசெய்தல் மற்றும் மீளமைத்தல் மற்றும் மருத்துவ நடைமுறையில் நெறிமுறை நேர்மைத்தன்மையை உறுதி செய்வதற்கான பொருத்தமான பணிப்புரைகளை வெளியிடுதல் ஆகியவை இதன் முக்கிய செயல்பாடுகளில் அடங்கும். சுகாதாரத் துறையில் ஒழுக்கநெறிமுறைக் கொள்கைகளை நிலைநிறுத்துவதிலும் தொழில்சார் கலாச்சாரத்தை வளர்ப்பதிலும் இந்தக் குழு முக்கிய பங்கு வகிக்கிறது.

பேராசிரியர் வஜிர எச்.டபிள்யு. திஸாநாய
(தலைவர்)

பேராசிரியர் மனோரி கமகே
பேராசிரியர் சுரங்கி யசவர்தன
பேராசிரியர் மாதவ சந்திரதிலக்க
பேராசிரியர் பி.எம்.எச்.எஸ்.கே. பன்னெஹெ
டாக்டர் ஜனக புஷ்பகுமார
டாக்டர் சுரேஷ் சண்முகநாதன்
டாக்டர் ஹரித அலுத்கே
டாக்டர் சண்டிக எபிடகடுவ
டாக்டர் பண்டார வரகாகொட
டாக்டர் தேனுவன் விக்கிரமசிங்க
டாக்டர் சந்தன தர்மரத்ன
டாக்டர் டி.எஸ். சமரவீர

**மன்ற நிர்வாகம்**
டாக்டர் எச். டி. பி. ஹேரத்
(பதிவாளர்)
திருமதி. அனுஷா சபாநாதன்
(உதவிப் பதிவாளர்)
திரு. ஜூட் நாணயக்கார
(தலைவர் சட்டப்பரிவு)

## 22. எல்லை கடந்த தொலை மருத்துவ உப குழு

தொலை மருத்துவத்தைப் பயன்படுத்தி சர்வதேச எல்லைகளில் சுகாதாரக்கவனிப்பு சேவைகளை வழங்குவதில் தொடர்புடைய ஒழுங்குறுத்துகை, தொழில்நுட்ப, நெறிமுறை மற்றும் தொழிற்பாட்டு சவால்களை நிவர்த்தி செய்வதில் கவனம் செலுத்தும் ஒரு பிரத்யேக அமைப்பாக எல்லை கடந்த தொலை மருத்துவ உப குழு உள்ளது. இந்த உபகுழுவானது வழிகாட்டுதல்களை உருவாக்குதல், இயங்குதன்மையை ஊக்குவித்தல், சட்ட மற்றும் தரவு பாதுகாப்பு கட்டமைப்புகளுடன் இணங்குவதை உறுதி செய்தல் மற்றும் பல்வேறு நியாயாதிக்கங்களில் சுகாதார வழங்குநர்கள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் பங்குதாரர்களிடையே ஒத்துழைப்பை எளிதாக்குதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது. நோயாளர் பாதுகாப்பு, தரவு பாதுகாப்பு மற்றும் சர்வதேச தரங்களை கடைபிடிப்பதை உறுதி செய்யும் அதே வேளையில், உலகளவில் தரமான சுகாதாரப் பராமரிப்புக்கான அணுகலை மேம்படுத்துவதே இதன் குறிக்கோளாகும்.

பேராசிரியர் ஆர்.பி.மாரசிங்க
(தலைவர்)

டாக்டர் சுரேஷ் சண்முகநாதன்
டாக்டர் சந்தன தர்மரத்ன
டாக்டர் ஜனக புஷ்பகுமார
டாக்டர் ஹரித அலுத்கே

**மன்ற நிர்வாகம்**
டாக்டர் எச். டி. பி. ஹேரத்
(பதிவாளர்)
திருமதி. அனுஷா சபாநாதன்

## SLMC பங்குதாரர்களுக்கான பெறுமதி உருவாக்கம்



## 4.1. நோயாளர்கள்

### பராமரிப்பு பதிவேடுகள்

இலங்கை மருத்துவ மன்றமானது நோயாளிகளின் தகவலுக்காக பின்வரும் பதிவேடுகளை பேணிவருகின்றது:- :

- விசேட மருத்துவ தொழில்வல்லுநர்கள் (பிரிவு 39B)
- விசேட பல் மருத்துவ தொழில்வல்லுநர்கள் (பிரிவு 39B)
- மருத்துவ தொழில்வல்லுநர்கள் (பிரிவு 29 மற்றும் ACT15)
- பல்மருத்துவர்கள் (பிரிவு 43)
- பதிவுசெய்யப்பட்ட மருத்துவ தொழில்வல்லுநர்கள் (பிரிவு 41)
- மருத்துவச்சிகள் (பிரிவு 51)
- மருந்தாளர்கள் (பிரிவு 56)
- துணை மருத்துவ உதவியாளர்கள் (பிரிவு 60A) – மின்கதிரியல் பதிவாளர்கள், ஒலிபதிவாளர்கள், சிகிச்சை உடலியல் நிபுணர்கள், பேச்சு வைத்தியர், தண்டெலும்பு வைத்தியர், உணவு முறைவல்லுநர், கண்சிகிச்சையாளர், மூளைமின்னலைபதிவாளர், ஊட்டச்சத்து வல்லுநர், மனநல மருத்துவ சிகிச்சையாளர்.
- மருத்துவத்திற்கு உதவியளிக்கு தொழில்கள் (பிரிவு 60F) – கதிர்ப்பட பதிவாளர், மருத்துவ ஆய்வுகூட தொழிநுட்பவியலர், இயன்முறைமருத்துவர், தொழில்சார் சிகிச்சையாளர்கள்
- மருத்துவ தொழில்வல்லுநர்கள், பல் மருத்துவர் மற்றும் தாதியர்களின் தற்காலிக பதிவகள் (பிரிவு 67A)

### உறுதிப்படுத்தல்கள்

**இலங்கை மருத்துவ மன்றமானது பின்வரும் உறுதிப்படுத்தல் சேவைகளை வழங்குகின்றது:**

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக வெளிநாட்டலுவல்கள் அமைச்சுக்கு வழங்கப்படுகின்ற மருத்துவ சான்றிதழ்களின் உறுதிப்படுத்துகை

சுகாதாரக் கவனிப்பு நிறுவனங்களினால் தொழிலுக்கு முன்னர் மருத்துவர்களின் பதிவின் உறுதிப்படுத்துகை

### அக்கறைகளை அதிகரித்தல்

இலங்கை மருத்துவ மன்றமானது மன்றத்தில் பதிவுசெய்துகொண்ட எவராவது மருத்துவருக்கு எதிராக செய்யப்பட்ட முறைப்பாடுகளை விசாரிப்பதற்கான அதிகாரத்தை கொண்டுள்ளது.

ஒரு முறைப்பாட்டை செய்கின்றபோது:

1.0. முறைப்பாடானது மருத்துவருக்கு/களுக்கு எதிராக சர்த்தப்படும் தகவல்கள் விடய்ங்களை குறிப்பிட்டு சத்தியக்கடதாசி ஒன்றுடன் இணைத்து தலைவருக்கு முகவரியிடப்பட்ட கடிதமொன்றினூடாக அனுப்பப்படுதல் வேண்டும்.

2.0. சத்தியக்கடதாசியில் குற்றஞ்சாட்டப்பட்ட மருத்துவரின் பெயர் தெளிவாக குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். காப்புக் கடிதத்தில் முறைப்பாடுசெய்பவரின்

முழுப் பெயர்கள் தொடர்பு முகவரி மற்றும் தொலைபேசி இலக்கங்களுடன் தெளிவாக குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

## இலங்கை மருத்துவ மன்ற விசாரணை நடைமுறை

### ஆரம்ப விசாரணை:

PPC இற்கு ஒரு முறைப்பாடு செய்யப்பட்டவுடன் மருத்துவர் அவருக்கு எதிரான முறைப்பாடு பற்றி அறிவிக்கப்படுவார். முன்வைக்கப்பட்ட அனைத்து சத்திய கடதாசிகளதும் பிரதியொன்று மருத்துவருக்கு வழங்கப்படும். மருத்துவர் அத்தகைய முறைப்பாடு அறிக்கை தொடர்பில் ஏதாவது விளக்கமொன்றை சமர்ப்பிப்பதற்கான வாய்ப்பொன்று வழங்கப்படும். குழு அதன் பின்னர் தொடர்புடைய அனைத்து தரப்புகளதும் சான்றை அறிந்து குழு விடயத்தை ஆராய்ந்து தொழில்சார் நடத்தைக் குழுவுக்கு அதன் காண்புகளை உள்ளடக்கிய அறிக்கையொன்றை தயாரித்து சமர்ப்பிக்கும்.

### தொழில்சார் நடத்தை விசாரணை(PCC):

- PCC ஆனது PPC-யின் அறிக்கையைக் கருத்தில் கொண்டு, முறைப்பாடு அல்லது அறிக்கையில் கூறப்பட்டுள்ள சம்பவங்கள் அல்லது விடயங்கள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டுமா இல்லையா என்பதைத் தீர்மானிக்கும். எந்த விசாரணையும் நடத்தப்படக்கூடாது என்று தீர்மானிக்கும்பட்சத்தில், முறைப்பாட்டாளருக்கும் மருத்துவருக்கும் அத்தகைய தீர்மானத்தைத் தெரிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- இந்த விடயத்தில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று PCC தீர்மானித்தால், மருத்துவருக்கு எதிராக சார்த்தப்பட்ட குற்றச்சாட்டுகளைக் குறிப்பிட்டு விசாரணை அறித்தலொன்றை மருத்துவருக்கு அனுப்பும். விசாரணை அறிவித்தலின் பிரதியொன்று முறைப்பாட்டாளருக்கும் அனுப்பி வைக்கப்படும்.
- பின்னர் இந்த விடயத்தில் விசாரணை நடத்தப்படும், இதன் மூலம் குற்றச்சாட்டுகளில் கூறப்படும் விடயங்கள் தொடர்பாக ஆதாரங்கள் சேர்க்கப்படும். தனக்கு எதிராக முன்வைக்கப்பட்ட அத்தகைய குற்றச்சாட்டை நிராகரிப்பதற்கான சான்றுகளை வழங்கவும் மருத்துவருக்கு வாய்ப்பு வழங்கப்படும்.

- வழக்கின் இறுதியில், குற்றச்சாட்டுகள் PCC திருப்தி அடையும் வகையில் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதை PCC தீர்மானிக்கும். குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால், PCC பொருத்தமாக நினைக்கும் வகையில் PCC தீர்மானத்தை அறிவிக்கும். குற்றவாளி இல்லை என நிரூபிக்கப்பட்டால், அத்தகைய தீர்மானம் பதிவு செய்யப்பட்டு, PCC பொருத்தமாக நினைக்கும் வகையில் அத்தகைய தீர்மானம் அறிவிக்கப்படும். அத்தகைய மருத்துவர் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால், சாத்தியமான தண்டனைகளில், 1927 ஆம் ஆண்டின் 26 ஆம்

இலக்க மருத்துவ கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 105) பிரிவு 25 இன் படி, பதிவேட்டில் இருந்து மருத்துவரின் பெயரை நீக்குவது அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு இடைநிறுத்துவது ஆகியவை அடங்கும்.பின்னர் PCC அத்தகைய தீர்மானத்தை மன்றத்திற்கு தெரிவிக்கும், அதன் பின்னர் மன்றம் SLMC பதிவாளரை அத்தகைய தர்மானத்தை செயல்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்க அறிவுறுத்தும்.

## 4.3. மருத்துவர்கள் /பல்மருத்துவர்கள்

### மருத்துவர்கள் மற்றும் பல்மருத்துவர்களுக்கு வழங்கப்படும் சேவைகள்

- விசேட நிபுணர் பதிவு
- மேலதிக தகைமைகளின் பதிவு
- பதிவேட்டில் விபரங்களை இற்றைப்படுத்தல்
- பதிவு சுருக்கத்தின் சான்றிதழை வழங்குதல்
- பதிவை புதுப்பித்தல்/ பதிவேட்டில் பெயர்களின் மீளிடுகை/ ஆவணங்களுக்கான கோரிக்கை கடிதங்களை சமர்ப்பித்தல்
- SLMC அடையாள அட்டைகளை வழங்குதல்
- தொழில்சார் வழிகாட்டல்
- தற்காலிக பதிவு
- நிரந்தரப் பதிவு
- தற்காலிகப் பதிவு (பிரசை அல்லாத மருத்துவர்கள்)
- உள்ளகப்பயிற்சி சான்றிதழ் ஆவணங்களை வழங்குதல்
- ஒழுக்காற்று நடைமுறைகள்

## 4.4. மருத்துவர்களுக்கான வழிகாட்டல், ஆலோசனை மற்றும் ஒழுக்கநெறிகள்

**மருத்துவ சத்தியப்பரமாணம்**

**1. ஒழுக்கநெறி மற்றும் தொழில்சார் முறையற்றநடத்தை வழிகாட்டல்கள்**

இலங்கை மருத்துவ மன்றத்தில் பதிவுசெய்துகொண்டுள்ள **மருத்துவர்கள் மற்றும் பல்மருத்துவர்களுக்கான ஒழுக்கநெறி நடத்தை பற்றிய வழிகாட்டல்கள்**

**மருத்துவர்கள் மற்றும் பல்மருத்துவர்களுக்கான பாரதூரமான தொழில்சார் முறையற்றநடத்தை தொடர்பிலான** இலங்கை மருத்துவ மன்றத்தின் அறிவுருத்தல்கள்.

**மருத்துவர்கள் மற்றும் பல்மருத்துவர்களுக்கான வழிகாட்டல்கள் - மருத்துவ மற்றும் இறப்பு சான்றிதழ்கள்**

**2. உள்ளகப்பயிற்சி வழிகாட்டல் கையேடு**

**உள்ளகப்பயிற்சிக்கான வழிகாட்டல்கள்** –2013 **இல் திருத்தப்பட்டது.** இதன் இணைப்பு அனுகல் [https://slmc.gov.lk/en/education/internship](https://slmc.gov.lk/en/education/internship)

**3. ERPM வழிகாட்டல் புத்தகம்**

இலங்கையில் மருத்துவத்தொழிலை செய்வதற்கு பதிவுசெய்கொள்வதற்கான பரீட்சைக்கான (ERPM) வழிகாட்டல் மன்றத்தின் கல்விக்குழுவினால் தொகுக்கப்பட்ட பரீட்சை விதிகளையும் உள்டக்குகின்றது. இந்த திருத்தப்பட்ட புதிய அமைப்புமுறை 2017 மார்ச் 1 முதல் நடைமுறையில் இருப்பதோடு 2021 மே 26 ஆம் திகதியன்று இற்றைப்படுத்தப்பட்டது. இதை *https://slmc.gov.lk/en/examinations/erpm* எனும் முகவரியில் காணலாம்.

## SLMC இல் மருத்துவக் கல்வி, பயிற்சி, கண்காணிப்பு மற்றும் தர உத்தரவாதம்.

### 1. ஆகக்குறைந்த தராதர ஒழுங்குவிதி

கீழே பட்டியலிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்களில் மருத்துவ கல்விக்கான ஆகக்குறைந்த தராதரங்கள் குறித்துரைக்கப்பட்டிருக்கின்றன:

- அதிவிசேட வர்த்தமானி இல. 2055/54 – 2018 சனவரி 26, வெள்ளிக்கிழமை,
- அதிவிசேட வர்த்தமானி இல. 2155/15 - 2019 டிசம்பர் 26,வியாழக்கிழமை,
- அதிவிசேட வர்த்தமானி இல. 2222/69 – 2021 ஏப்ரல் 10, சனிக்கிழமை,

## மருத்துவ /பல்மருத்துவ மாணவர்கள்

SLMC- அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு மருத்துவ பட்டதாரிகள்






# 2024 ஆம் ஆண்டுக்காலப் பகுதியில் பல்வேறுபட்ட பிரிவுகளின் செயலாற்றுகை



# பதிவுசெய்தல் பிரிவு
# இலங்கை மருத்துவ மன்றம்

## 2024ஆம் ஆண்டில் மருத்துவ / பல்மருத்துவர்களின் பதிவு







## 2024 ஆம் ஆண்டில் மருத்துவ / பல்மருத்துவர்களின் தற்காலிக பதிவு







## மருத்துவ / பல்மருத்துவ பதிவாளர்கள்

| ஒவ்வொரு வருடத்திலும் டிசம்பர் 31 அளவில் செயற்பாடுள்ள பதிவு அனுமதிப்பத்திர இலக்கத்தை கொண்ட மருத்துவர்களின் எண்ணிக்கை | |
|---|---|
| 2023 | 2024 |
| 35520 | 37463 |

| ஒவ்வொரு வருடத்திலும் டிசம்பர் 31 அளவில் செயற்பாடுள்ள பதிவு அனுமதிப்பத்திர இலக்கத்தை கொண்ட பல் மருத்துவர்களின் எண்ணிக்கை | |
|---|---|
| 2023 | 2024 |
| 2499 | 2599 |

## உள்ளூர் /வெளிநாட்டு மருத்துவ கல்லூரிகளின் பட்டதாரிகள் – 2024




(பிரிவு.29)

## மருத்துவர்களின் தற்காலிக பதிவு - 2024 (பிரிவு.29(2)



## விசேட மருத்துவர்களின் பதிவு (SEC.39B)

**2023**

மருத்துவம்–

245

பல்மருத்துவம்

**2024**

மருத்துவம் –

752

பல்மருத்துவ –

## 2024.12.31. வரை ஏனைய சுகாதார கவனிப்பு வகுதிகளில் உள்ளவர்களின் பதிவு

மருத்துவச்சிகள், பாதவியல் விசேட வைத்தியர்கள், மருந்தாளர்கள், துணை மருத்துவ உதவியாளர்களுக்கான மருந்துகள் வழங்குபவர்கள் உணவு கட்டுப்பாட்டாளர்களுக்கு உதவியான தொழில்கள், கண்மருத்துவர்கள், கதிர்வீச்சு பதிவாளர்கள், மின்இதயத்துடிப்பு பதிவாளர்கள், மூளைமின்அழுத்த பதிவாளர்கள், மருத்துவ ஆய்வுகூட தொழிநுட்பவியலர்கள்

**பதிவுசெய்தவர்களின் எண்ணிக்கை**– 2024

| பதிவு வகுதி | பதிவுசெய்தவர்களின் எண்– 2024 |
|---|---|
| SEC51 - (மருத்துவச்சிகள்) | 1937 |
| SEC56 - (மருந்தாளர்கள்) | 6162 |
| SEC60E - ( மின்இதயத்துடிப்பு பதிவாளர்கள் ) | 0015 |
| SEC60F - (ஒலிப்புலபதிவாளர்கள்) | 0046 |
| SEC60G - (அறுவைச்சிகிச்சை மனநலவியர்) | - |
| SEC60H - (பேச்சுவிசேடமருத்துவர்) | 0094 |
| SEC60I - (பாத விசேட மருத்துவர்) | - |
| SEC60J - (உணவுசார் விசேடமருத்துவர்) | 0047 |
| SEC60K - (கண்மருத்துவ துணைப்பொருட்கள்) | 0044 |
| SEC60L - ( மூளைமின்அழுத்த பதிவாளர்கள் ) | 0008 |
| SEC60M - (சத்துணவாளர்) | 0120 |
| SEC60N - (சிகிச்சை மனநலமருத்துவர்) | 0027 |
| SEC60A - (கதிர்ப்பட பதிவாளர்கள்) | 0494 |
| SEC60B - (மருத்துவ ஆய்வுட தொழிநுட்பவியலர்) | 1989 |
| SEC60C - (இயன்மருத்துவர்கள்) | 0698 |
| SEC60D - (தொழில்சார் | 0067 |

| | |
|---|---|
| உடல்பிடித்துவிடுவோர்) | |

# சான்றுப்படுத்துகை பிரிவு
# இலங்கை மருத்துவ மன்றம்

## பிரதான ஆணை

2018 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மருத்துவ ஒழுங்குவிதிகள் (மருத்துவ கல்வியின் ஆகக்குறைந்த தாராதரங்களைப் பேணுதல்) மற்றும் அதைத் தொடர்ந்த திருத்தங்களுக்கு அமைவாக இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழமொன்றின் அல்லது நிறுவனத்தின் அல்லது நிகழ்ச்சித்திட்டமொன்றின் சான்றுப்படுத்துகை தீர்மானத்தை மேற்கொள்வதற்கான கொள்கைகளையும் நடைமுறைகளையும் விருத்திசெய்தல். அத்தகைய மருத்துவ மற்றும் பல்மருத்துவ கல்லூரிகளின் சான்றுப்படுத்துகையை ஐந்து வருடத்திற்கு ஒருமுறை பொறுப்பேற்றல்.

### சான்றுப்படுத்துகை பிரிவின் பதவியினர்

| | |
|---|---|
| பேராசிரியர் கோமிந்த பொன்னம்பெரும | - பிரிவின் தலைவர் |
| டாக்டர் பாலித அபேகோன் | - உறுப்பினர் |
| பேராசிரியர் சுரங்கி யசவர்தன | - உறுப்பினர் |
| பேராசிரியர் மாதவ சந்திரதிலக | - உறுப்பினர் |
| பேராசிரியர் பந்துல சிறிபத்தன | - உறுப்பினர் |
| திருமதி. நதீகா விஜதாச | - முகாமைத்துவ உதவியாளர் |

### சான்றுப்படுத்துகைப் பிரிவின் இணையத்தளம்

சான்றுப்படுத்துகைப் பிரிவின் பிரத்தியோக இணையத்தளம் (www.au.slmc.gov.lk) 2021 செப்டம்பரில் ஆரம்பித்து வைக்கப்பட்டது இந்த இணையத்தளமானது சான்றுப்படுத்துகைப் பிரிவின் தொழிற்பாடுகள், செயல்முறைகள், தொடர்புடைய ஆவணங்கள் மற்றும் மருத்துவ கல்லூரிகளின் சான்றுப்படுத்துகை தொடர்பான பிற முக்கிய விபரங்கள் தொடர்பான புதுப்பிக்கப்பட்ட தகவல்களை வழங்குகிறது. இந்த இணையத்தளம் பயனர் நட்பு மற்றும் கையடக்க தொலைபேசி சாதனங்களைப் பயன்படுத்தி கூட அணுகக்கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

### கூட்டங்கள்

சான்றுப்படுத்துகைப் பிரிவின் உறுப்பினர்கள் வழமையான மற்றும் திட்டமிடப்படாத சான்றுப்படுத்துகைப் பிரிவின் கூட்டங்களில் கலந்துகொண்டதோடு அதற்கு மேலதிகமாக மன்றத்தின் சில உறுப்பினர்கள் சான்றுப்படுத்துகைப் குழுவின் கூட்டங்களிலும் கலந்துகொண்டனர். பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் தர உத்தரவாத குழுவின்

பணிப்பாளர் அவர்களும் குழுவின் கூட்டங்களுக்கு அழைக்கப்பட்டார். ஒவ்வொரு கூட்டத்திற்கு முன்னரும் நிகழ்ச்சிநிரலும் முன்னைய கூட்டத்தின் கூட்ட அறிக்கையும் ஒவ்வொரு அங்கத்தவருக்கும் வினியோகிக்கப்பட்டன. ஒவ்வொரு கூட்டத்திற்குமான பொருத்தமான நினைவுக்குறிப்புகள் கலந்துரையாடலுக்காக சமர்ப்பிக்கப்பட்டு,அங்கீகாரம் கோரப்பட்டது. சில கூட்டங்கள் இணையவழிமூலமாகவும், கலப்பு முறையிலும் ஏனையவை அதேஇடத்தில் இடம்பெற்ற கூட்டங்களாகவும் இருந்தன.

சான்றுப்படுத்துகைப் பிரிவின் கூட்டங்களின் எண்ணிக்கை – 17
சான்றுப்படுத்துகைப் பிரிவின் விசேட கூட்டங்களின் எண்ணிக்கை – 01
சான்றுப்படுத்துகைப் குழுவின் கூட்டங்களின் எண்ணிக்கை – 10
மருத்துவ பீடங்களின் பீடாதிபதிகளுடனான கூட்டங்களின் எண்ணிக்கை – 01

## இலங்கையில் மருத்துவக் கல்லூரிகின் சான்றுப்படுத்துகை

பீடாதிபதிகள் சுய மதிப்பீட்டு அறிக்கைகயை பூர்த்திசெய்து அதை தொடர்புடைய இணைப்புகளுடன் சான்றுப்படுத்துகை பிரிவுக்கு சமர்ப்பிக்கும்படி கோரப்படுகின்றனர். பீடாதிபதிகள் சு.ம.அ. வேறுபட்ட காலங்களில் பூர்த்திசெய்து சமர்ப்பித்தனர். இது கிடைக்கப்பெற்றவுடன் சான்றுப்படுத்துகை பிரிவினால் மீளாய்வுக்குழுக்கள் அமைக்கப்பட்டன. மீளாய்வு செயன்முறையானது ஒரு மேசை மீளாய்வு மற்றும் உரிய பீடம் மற்றும் போதனா ரவத்தியசாலைக்ககான மூன்றுநாள் “மீளாய்வு விஜயம்” (கள விஜயம்) என்பவற்றை உள்ளடக்கியது. கள விஜயத்தை பூர்த்திசெய்தபின்னர், மீளாய்வுக்குழுவின் தலைவர் வரைவு மீளாய்வு அறி;க்கையை சான்றுப்படுத்துகை பிரிவுக்கு சமர்ப்பித்தார். மீளாய்வாளர்கள் மற்றும் பீடாதிபதியுடனான கலந்துரையாடலைத்தொடர்ந்து சான்றுப்படுத்துகை தொடர்பான இறுதி மீளாய்வு அறிக்கை தீர்மானத்துடன் சான்றுறிதியளிப்புக்காக மன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. மன்றத்தினால் சான்றுறிதியளியளிப்பு வழங்கப்பட்டதன் பின்னர், சான்றுப்படுத்த்துகை தீர்மானம் உரிய உபவேந்தருக்கும் பீடாதிபதிக்கும் எத்திவைக்கப்படுகின்றது. சான்றுப்படுத்துகை தீர்மானம்(தீர்ப்பு) என்பது சான்றுப்படுத்துகை வழங்கப்பட்டதா அல்லது நீராகரிக்கப்பட்டதாக என்பதாகும். அனைத்து ஒன்பது பீடங்களும் தமது சுற்றை பர்த்திசெய்துள்ளதோடு “திருப்திகரமானசராசரி தர புள்ளிகளுடன்” “சான்றளிப்பை” பெற்றுள்ளன.

மேலே குறிப்பிட்ட சான்றளிப்பு மீளாய்வுகளுக்கு மேலதிகமாக சான்றளிப்பு பரிவு ஏனைய இரண்டு வகை மீளாவுகளை மேற்கொண்டுள்ளது. ,

**1. புதிதாக தாபிக்கப்பட்ட மருத்துவ கல்லூரிகளின் மீளாய்வு.**

இது மருத்துவ கல்லூரிகள் அவற்றின் சான்றுப்படுத்துகை மீளாய்வுக்கான அவை தகைமைபெற்றிருக்கன்ற சந்தர்ப்பத்தில் தேவையான தராதரங்களை அடைந்திருப்பதில் உதவுவின்ற ஒரு முறையான மீளாய்வாகும். மீளாய்வின் இறுதியில் தொடர்புடைய கல்லூரிகளுக்கு சிபாரிசுகளுடன் மீளாவு அறிக்கை வழங்க்கப்பட்டது..

**2. தாபிப்பதற்கு முன்னர் அங்கீகரத்திற்காக உத்தேச மருத்துவ கல்லூரிகளின் மீளாய்வு**

புதிய மருத்துவ கல்லூரியொன்று தொழிற்பாடுகளை ஆரம்பிப்பதனை அங்கீகரித்து பொருத்தமான மதிப்பீட்டை செய்வதற்கு சான்றுப்படுததுகை பிரிவினால் நடாத்தப்பட்ட ஒரு முறையான மீளாய்வாகும்.

இரண்வது மீளாய்வு விஜயத்தை பின்தொடர்க - 01

பீடங்களுக்கான ஆரம்ப மீளாய்வு விஜயங்கள் - 04

பீடங்களுக்கான ஆரம்ப இரண்டாவது மீளாய்வு விஜயங்கள் - 02

அரசல்லாத மருத்துவ கல்லூரி கட்டம் -1 மீளாய்வு விஜயங்கள் -3

(மேசை மதிப்பீடு, மீளாய்வு விஜயம், இறுதி மீளாய்வு அறிக்கை மற்றும் இறுதித் தீர்மானம் உபவேந்தருக்கும் பீடாதிபதிக்கும் தெரிவிக்கப்பட்டள்ளது)

ஆரம்ப மீளாய்வு விஜயம், மருத்துவ பீடம், இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்



ஆரம்ப மீளாய்வு விஜயம், மருத்துவ பீடம், இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்



## மீளாய்வாளர்கள்

ஒவ்வொரு குழுவுக்குமான மீளாய்வாளர்கள் (ஒவ்வொன்றிலும் ஐந்து அங்கத்தவர்கள்) அத்தகைய நியமனங்களுக்கான தகுதிறன்களின் அடிப்படையில் மீளாய்வாளர்கள் குழுமத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்டனர்.

கிடைக்கப்பெற்றமொத்த விண்ணப்பங்கள் – 45

நியமிக்கப்பட்ட மீளாய்வாளர்களின் எண். – 35

நியமிக்கப்பட்ட மீளாய்வுக் குழுக்களின் எண். – 14

## பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்

சான்றுப்படுத்துகை பிரிவு அங்கத்தவர்களுக்கான மூன்று பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 2024.06.03 திகதியிலிருந்து 2024.06.08 ஆம் திகதி வரை நடைபெற்றது. முதலாலது பயிற்சி நிகழ்ச்சி சிங்கப்பூரிலும் அதைத்தொடர்ந்து தாய்லாந்து மற்றும் இந்தேனெசியாவிலும் நடைபெற்றன. இந்த பயிறிசி நெறிகளில் கலந்துகொண்ட சான்றுப்படுத்துகை அங்கத்தவர்கள் இந்த நாடுகள் பினபற்றுகின்ற சான்றுப்படுத்துகையுடன் தொடர்புடைய பரஸ்பரம் நன்மைபயக்கக்கூடிய கொள்கைகள், நடைமுறைகள் என்பவற்றை மீளாய்வுசெய்தனர். இந்தேனேசியாவில் சான்றுப்படுத்துகை கள விஜயமொன்றையும் சன்றுப்படுத்துகை அலுங்கத்தவர்கள் அவதானித்தனர்.

**உலக சுகாதார அமைப்பு பயிற்சிக்கு அனுசரணை அளித்தது.**

சான்றுப்படுத்துகை பிரிவு மற்றும் மீளாய்வாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை – 03 சான்றுப்படுத்துகை பிரிவின் உறுப்பினர்கள் மற்றும் மீளாய்வாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை(சிங்கப்பூரில்)- 02

சான்றுப்படுத்துகை பிரிவின் உறுப்பினர்கள் மற்றும் மீளாய்வாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை (தாய்லாந்தில்)- 02

சான்றுப்படுத்துகை பிரிவின் உறுப்பினர்கள் மற்றும் மீளாய்வாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை (இந்தோனேசியாவில்) - 02




சிங்கப்பூரில் சான்றுப்படுத்துகை பிரிவின் உறுப்பினர்கள் மற்றும் மீளாய்வாளர்களுக்கான பயிற்சி செயலமர்வு

தாய்லாந்தில் சான்றுப்படுத்துகை பிரிவின் உறுப்பினர்கள் மற்றும் மீளாய்வாளர்களுக்கான பயிற்சி செயலமர்வு









இந்தேனேசியாவில் சான்றுப்படுத்துகை பிரிவின் உறுப்பினர்கள் மற்றும் மீளாய்வாளர்களுக்கான பயிற்சி செயலமர்வு

அவர்களது அங்கீகாரத்தில் WFME சிபாரிசுகள் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதோடு WFME அறிக்கையை ஏற்றுக்கொண்டது. சான்றுப்படுத்துகை பிரிவின் இரண்டு அங்கத்தவர்களை WFME 2025 மே மாதத்தில் நடைபெறவுள்ள சர்வதேச மாநாட்டுக்கு அழைப்பு விடுத்திருக்கின்றது.

## வரவுசெலவுத் திட்டம்

தேவையான நிதிகள் மன்றத்தினால் ஒதுக்கப்பட்டன. தொடர்புடைய செலவினங்கள் முகாமைத்துவக் குழு மற்றும் மன்றத்தினால் கோரிக்கை தொடர்பான நியாயப்படுத்துகையின் பேரில் அங்கீகரிக்கப்பட்டன. பெறுகைகள் மற்றும் இறுதி கொடுப்பனவுகள் SLMC இன் நிதிப் பிரிவினால் செய்யப்பட்டன. நிதிகள் சான்றுப்படுத்துகை பிரிவின் தலைவரினால் WHO இலிருந்து பெறப்பட்டதோடு பெறுகைகள் WHO இனால் செய்யப்பட்டது.

சம்பளங்கள் மற்றும் மீண்டுவரும் செலவினம் - ரூ. 2.8 மில்லியன்
SLMC இன் மொத்த ஒதுக்கீடு - ரூ. 3.0 மில்லியன்
AU குழு மற்றும் மீளாய்வாளர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக
WHO இனால் வழங்கப்பட்ட மொத்தக் கொடை - அ.டொ 26,000
(சிங்கப்பூர்/தாய்லாந்து/இந்தோனேசியா)

ஒப்பம்
பேராசிரியர் கோமிந்த பொன்னம்பெரும
தலைவர், சான்றுப்படுத்துகைப் பிரிவு

பரீட்சைப் பிரிவு
இலங்கை மருத்துவ மன்றம்

# ஆண்டறிக்கை- 2024

# பரீட்சைகள் பிரிவு – இலங்கை மருத்துவ மன்றம்

## ERPM / ERPDS பரீட்சைகள்

இவ்வாண்டில், பரீட்சைகள் பிரிவு ஒரு ERPM பரீட்சை, ஒரு பகுதி A & D பரீட்சை, ஒரு பகுதி B & C பரீட்சை மற்றும் இரண்டு முழுமையான ERPDS பரீட்சைகளை பூர்த்திசெய்ய முடிந்தது.

2023 அக்டோபர்/நவம்பர் இல் நடைபெற்ற ERPM பகுதி A & D இன் தொடர்புடைய பகுதி B & C, 2024ஜனவரி முதல் மார்ச்சு வரை 8 அரச மருத்துவ பீடங்களில் (கொழும்பு, பேராதனை, யாழ்ப்பாணம், ருஹுணா, களனி, ஸ்ரீ ஜயவர்தனபுர, ராஜரட்ட மற்றும் கிழக்கு) நடைபெற்றது. 582 பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு தோற்றினர். தகுதிவாய்ந்த 162 மருத்துவ பட்டதாரிகளின் திறமைச்சித்திப் பட்டியல் 2024 ஜூன் 6, அன்று சுகாதார அமைச்சுக்கு அனுப்பப்பட்டது.

இரண்டாவது ERPM பரீட்சையின் பகுதி A & D ஆகியன 2024 ஜூன் இல் கொழும்பு 8 இல் உள்ள அக்வினாஸ் உயர்கல்வி கல்லூரியில் நடைபெற்றதோடு 868 பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு தோற்றினர். 2024 ஜூலையில் பெறுபேறுகள் வெளியிடப்பட்டன. B & C இன் தொடர்புடைய பகுதி 2024 ஆகஸ்ட்/செப்டம்பர்இல் 8 அரச மருத்துவ பீடங்களில் (கொழும்பு, பேராதனை, யாழ்ப்பாணம், ருஹுணா, களனி, ஸ்ரீ ஜயவர்தனபுர, ராஜரட்ட மற்றும் கிழக்கு) நடத்தப்பட்டன. 733 பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு தோற்றினர். தகுதி பெற்ற 325 மருத்துவ பட்டதாரிகளின் திறமைப் பட்டியல் 2024 அக்டோபர் 16 ஆம் திகதி அன்று சுகாதார அமைச்சுககு அனுப்பப்பட்டது.

மூன்றாவது ERPM பரீட்சையின் A & D பகுதிகள் 2024 நவம்பரிர்ல் கொழும்பு பல்கலைக்கழகத்தின் பட்ட படிப்பு பீடத்தில் நடைபெற்றதோடு 784 பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு தோற்றினர். பெறுபேறுகள் 2024 டிசம்பர் இல் வெளியிடப்பட்டன. B & C அந்தந்த பகுதிகள் 2025 பெப்ரவரி-மார்ச் இல் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

ERPDS முதல் பரீட்சை பகுதி I 2024 மார்ச் இல் கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் நடைபெற்றதோடு 14 பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு தோற்றினர். அதன் பகுதி II 2024 ஏப்ரல் இல் பேராதனை பல் மருத்துவ பீடத்தில் நடைபெற்றதோடு 14 பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு தேற்றினர், பெறுபேறுகள் 2024 மே மாதம் வெளியிடப்பட்டன. தகுதி பெற்ற 4 பல் மருத்துவ பட்டதாரிகளின் திறமைப் பட்டியல் 2024 மே 3 ஆம்திகதியன்று சுகாதார அமைச்சுக்கு அனுப்பப்பட்டது.

இரண்டாவது ERPDS பரீட்சை பகுதி I 2024 செப்டம்பரில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் நடைபெற்றதோடு 7 பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு தோற்றினர். அதன் பகுதி II 2024 நவம்பர் 3 திகதியன்று பரீட்சை நிலையங்களில் (தேசிய பல் மருத்துவமனை, கொழும்பு, லேடி ரிட்ஜ்வே மருத்துவமனை, கொழும்பு, பல் மருத்துவ பீடம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்) நடைபெற்றது. 14 பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு தோற்றினர், பெறுபேறுகள் 2024 டிசம்பர் மாதம் வெளியிடப்பட்டன. தகுதி பெற்ற 8 பல் மருத்துவ பட்டதாரிகளின் திறமைப் பட்டியல் 2025ஜனவரி 6 ஆம் திகதி சுகாதார அமைச்சுக்கு அனுப்பப்பட்டது.



# வெளிநாட்டு பட்டங்கள் பிரிவு

# இலங்கை மருத்துவ மன்றம்

# இலங்கை மருத்துவ மன்றம்

## வெளிநாட்டுப் பட்டப் பிரிவு ஆண்டறிக்கைச் சுருக்கம் - 2024

## பிரதான ஆணை

பின்வருவன தொடர்பில் அங்கீகாரத்தை பெறுவதற்கும் தீர்மானங்களை அங்கீகரிப்பதற்குமான கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் பிரயோகங்களை விருத்திசெய்தலும் அவற்றை பொருத்தமான நிலையியற் குழுக்களுக்கு சமர்ப்பித்தலும் இறுதித் தீர்மானத்திற்கு சமர்ப்பித்தலும்:

1. வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள்/நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பம் 1 மற்றும் 2 ஐ அங்கீகரித்தலும் மற்றும் "2018 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மருத்துவ (மருத்துவக் கல்வியின் குறைந்தபட்ச தராதரங்களைப் பேணுதல்) ஒழுங்குவிதிகள் மற்றும் அதைத் தொடர்ந்துவந்த திருத்தங்களுக்கு அமைவாக அதனை மதிப்பீடுசெய்தலும்.

2. வெளிநாட்டு பட்டதாரிகள் ERPM பரீட்சைக்கு பதிவு செய்யக்கூடியவகையில் மன்றத்தினால் நிர்ணயிக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கமைவாக அவர்களின் பட்டப்படிப்பு அங்கீகாரம்.

3. கட்டளைச் சட்டம் மற்றும் மன்றத்தினால் நிர்ணயிக்கப்பட்ட வழிகாட்டுதல்களின்படி அவர்களின் பெயருக்கு முன் சேர்க்கப்பட வேண்டிய அவர்கள் பெற்றுக்கொண்ட வெளிநாட்டு மற்றும் உள்ளூர் மேலதிக தகுதிகளைச் உள்ளடக்க பதிவுசெய்யப்பட்ட மருத்துவ பயிற்சியாளர்களால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களை மதிப்பீடு செய்தல்

4. கட்டளைச் சட்டம் மற்றும் மன்றத்தினால் நிர்ணயிக்கப்பட்ட வழிகாட்டுதல்களின்படி 67A இன் கீழ் தற்காலிகப் பதிவுக்காக வெளிநாட்டு நிபுணர்களால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களை மதிப்பீடு செய்தல்.

## வெளிநாட்டு பட்டப் பிரிவின் பதவியினர்

திருமதி ரோஷனி திசாநாயக்க – முகாமைத்துவ உதவியாளர்

திருமதி வை.எம். மதுகலா – முகாமைத்துவ உதவியாளர்

### வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள்/நிறுவனங்களின் விண்ணப்பங்களை மீளாய்வு செய்தவர்கள்

2024 ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் மீளாய்வு குழுவின் பின்வரும் உறுப்பினர்கள் பல்கலைக்கழகங்கள்/மருத்துவம் மற்றும் பல் மருத்துவ கல்லூரிகளுக்கு மீளாய்வாளர்களாகப் பணியாற்றினர்.

### மருத்துவ கல்லூரி மீளாய்வாளர்கள் குழு

- டாக்டர் ஆர்.என்.ஏ.எம்.யூ.கே. பண்டார வரகாகொட
- பேராசிரியர் மனோரி கமகே
- பேராசிரியர் வசந்தி பின்டோ
- டாக்டர் ஆர்.சுரேந்திரகுமாரன்
- டாக்டர் ஜனக புஷ்பகுமார
- பேராசிரியர் மாதவ சந்திரதிலக
- பேராசிரியர் கோமிந்த பொன்னம்பெரும

- பேராசிரியர் அஞ்சனா டி சில்வா
- பேராசிரியர் அரியராணி ஞானதாசன்
- டாக்டர் சஞ்சீவ போவத்தே
- டாக்டர் ஆர்.கே.ஜே.எஸ்.ராஜபக்ஷ
- பேராசிரியர் ரசிக பெரேரா
- பேராசிரியர் கோசல வீரகோன்
- பேராசிரியர் ஷ்யாமலீ சமரநாயக்க
- டாக்டர் உமாங்கா சூரியராச்சி
- டாக்டர் கபில ஜயரத்ன
- டாக்டர் டபிள்யூ.ஏ.டி. தேனுவன் தரங்க விக்கிரமசிங்க
- டாக்டர் சண்டிக எபிடகடுவ
- டாக்டர் ஆர்.என்.ஏ.எம்.யு.கே.பண்டார வரகாகொட

## பல்மருத்துவ கல்லூரிகள் மீளாய்வாளர்கள் குழுமம்

- டாக்டர் எஸ் சண்முகநாதன்
- பேராசிரியர் மஞ்சுள ஆட்டியகல
- போரசிரியர் பீ.எம்.எச். எஸ்.கே.பென்னேஹெக
- டாக்டர் காமினி நவரத்ன

**கூட்டங்கள்**

வெளிநாட்டு பட்டங்கள் குழுவின் கூட்டங்களின் எண்ணிக்கை – 12

**அங்கீகாரத்திற்காக வெள்நாட்டு பல்கலைக்கழகங்கள்/நிறுவனங்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள்**

**விண்ணப்பம்** 1

கிடைக்கப்பெற்ற மொத்த தொகை - 17

மதிப்பிடப்பெற்ற மொத்த தொகை - 17

அங்கீகரிக்கப்ட்ட மொத்த தொகை - 13

செயற்பாட்டிலுள்ள மொத்த தொகை - 04

நிராகரிக்கப்ட்ட மொத்த தொகை - 01

**விண்ணப்பம் 2**

கிடைக்கப்பெற்ற மொத்த தொகை - 10

மதிப்பிடப்பெற்ற மொத்த தொகை - 10

அங்கீகரிக்கப்ட்ட மொத்த தொகை - 09

செயற்பாட்டிலுள்ள மொத்த தொகை - 08

**பட்ட அங்கீகார விண்ணப்பங்கள்**

ERPM **பரீட்சை**

இடம்பெற்ற சுற்றுக்களின் எண்ணிக்கை –

- 2023 நவம்பர் 1 முதல் 2024 பெப்ரவரி 1 வரை 2024 (சுற்று 1)
- 2024 மே 6 முதல் 2024 யூலை 15 வரை (சுற்று 2)

## விண்ணப்ப சுருக்கம்

- **சுற்று 1**
    - மொத்த விண்ணப்பங்கள் - 417
    - அங்கீகரிக்கப்பட்டவை- 414
    - நிராகரிக்கப்பட்டவை - 03
- **சுற்று 2**
    - மொத்த விண்ணப்பங்கள் - 401
    - அங்கீகரிக்கப்பட்டவை - 395
    - நிராகரிக்கப்பட்டவை - 06

## ERPDS பரீட்சை

இடம்பெற்ற சுற்றுக்களின் எண்ணிக்கை –

- 2023 நவம்பர் 1 முதல் 2024 பெப்ரவரி 15 வரை 2024 (சுற்று 1)
- 2024 மே 6 முதல் 2024 யூலை 15 வரை (சுற்று 2)

## விண்ணப்ப சுருக்கம்

- சுற்று 1
    - மொத்த விண்ணப்பங்கள் - 10
    - அங்கீகரிக்கப்பட்டவை - 09
    - நிராகரிக்கப்பட்டவை - 01
- சுற்று 2
    - மொத்த விண்ணப்பங்கள் - 01
    - அங்கீகரிக்கப்பட்டவை - 01
    - நிராகரிக்கப்பட்டவை - 00

**<u>பட்ட அங்கீகார விண்ணப்பங்கள்</u>**

இடம்பெற்ற சுற்றுக்களின் எண்ணிக்கை - 02
அனைத்து சுற்றுக்களதும் மொத்த காலம் - 08 மாதங்கள்
(நுழைவு திறக்கப்பட்டதிலிருந்து மூடப்படும் வரை)

சுற்று 1 (ஏப்ரல் 2023) - சுற்று 2023 சனவரிக்கு முன்னர் நிறைவுற்றது; 2022 ஏப்ரல் அறிக்கையில் சுருக்கம் ஏற்கெனவே குறிப்பிடப்பட்டுள்ளது.

**சுற்று 2 (ஒக்டோபர் 2023)**

கிடைக்கப்பெற்ற மொத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை - 382
அங்கீகரிக்கப்பட்டவை - 353
நிராகரிக்கப்பட்டவை - 09

**<u>மேலதிக தகைமை விண்ணப்பங்கள் (ஜன - டிச 2023)</u>**

கிடைக்கப்பெற்ற உள்ளூர் தகைமைகள் - 411 (145/2023/L-555/2023/L)
அங்கீகரிக்கப்பட்டவை - 409
நிராகரிக்கப்பட்டவை - 02
கிடைக்கப்பெற்ற வெளிநாட்டு தகைமைகள் - 78
அங்கீகரிக்கப்பட்டவை - 63

| | | |
|---|---|---|
| நிராகரிக்கப்பட்டவை | - | 02 |
| காத்திருப்பவை | - | 13 |

**67A விண்ணப்பம் (ஜன - டிச 2023)**

| | | |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்டவை | - | 73 |
| நிராகரிக்கப்பட்டவை | - | 02 |

# தகவல் தொழிநுட்ப பிரிவு
# இலங்கை மருத்துவ மன்றம்

# இலங்கை மருத்துவ மன்றம் – தகவல் தொழிநுட்ப பிரிவின் ஆண்டறிக்கை - 2024

## தகவல் தொழிநுட்ப பிரிவின் பொறுப்பும் பங்களிப்பும்

தகவல் தொழிநுட்ப பிரிவானது இலங்கை மருத்துவ மன்றத்தின் தொழிநுட்ப சட்டகமானது அதன் பிரதான இலக்குகளுடனும் நோக்கங்களுடனும் இயைந்து செல்கின்றது என்பதை உறுதிப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. இது நிறுவனத்தின் பணிக்கூற்றின் தொழிற்பாட்டு வினைத்திறன் மற்றும் ஆதரவை மேம்படுத்துவதற்கு வடிவமைக்கப்பட்ட தொழிநுட்பசார் தீர்வுகளின் கவனமான கோட்பாட்டுத்தன்மை மற்றும் உபாயமுறை அமுலாக்கம் என்பவற்றுடன் தொடர்புபடுகின்றது. புதிய முறைமைகளை நிறுவுதல், ஏற்கெனவே உள்ள உட்கட்டமைப்பின் வழமையான பராமரிப்பு, காலம் கடந்த தொழிநுட்பங்களை ரிய நேரத்திற்கு இற்றைப்படுத்தல் போன்றவை உள்ளிட்ட பரந்தளவிளான பொறுப்புக்கள் இப்பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலாக தகவல் தொழிநுட்ப பிரிவானது பணிஓட்டத்தை ஒழுங்குபடுத்துவதற்கும் விளைதிறனை மேம்படுத்துவதற்கும் வளர்ந்துவரும் சவால்களை எதர்கொள்ளவும் புத்தாக்க முறைமைகளையும் கருவிகளையும் முனைப்பாக ஆராய்கின்றது. தொழிநுட்ப முகாமைத்துவத்திற்கான நடைமுறைசாத்தியமான அணுகுமுறையொன்றை கைக்கொள்வதன் ஊடாக பிரிவானது மன்றத்தின் சுமுகமான தொழிற்பாட்டுக்கு பங்களிப்புசெய்கின்ற நம்பகமான, வினைத்திறன்மிக்க மற்றும் எதிர்கால நோக்குடைய தீர்வுகளை உறுதிப்படுத்துகின்றது.

## த.தொ. பிரிவானது தேவையானவாறு பின்வரும் தொழிற்பாடுகளுக்கு பொறுப்பாகவுள்ளது.

- தொலைபேசி மற்றும் குரல் முறைமை
- இணைய அணுகல் மற்றும் மின்னஞ்சல்
- நிகழ்ச்சித் திட்ட மென்பொருள்
- பிரதியெடுத்தல் இயந்தஜரங்கள்/பெக்ஸ்/ஸ்கேனர் கருவிகள் – அனைத்து வெளியகபொருட்களும்
- ஒலி & ஒளி கருவிகள்
- வலைப்பின்னல் பாதுகாப்பு மற்றும் செயலாற்றுகையை பேணுதலும் பணிபுரியத்தக்க பட்டியலிடல் கட்டமைப்பு, வலைப்பி;னல் பாதுகாப்பு, பரிதி இட ஒதுக்கம் என்பவற்றை தாபித்தலும்
- தாபிக்கப்பட்ட கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் வரையறைகளுக்கேற்ப பயனர் கணக்குகளை அமைத்தல்.
- பணி உத்தரவுகள் ஊடாக அனைத்து பிரச்சினைகளையும் சிக்கல்கலையும் கண்டுபிடித்தல்
- தேவையான போது புதிய தொலைபேசி இணைப்புகள் மற்றும் தகவல நுழைவுகளையும் திட்டமிடுதல்
- வலைப்பின்னல் பராமரிப்பு, மாற்றங்கள் மற்றும் இற்றைப்படுத்தல்களை செயலாற்றுதல்.

பிரிவு தகவல் தொழிநுட்ப சேவைகளின் துண்டிக்கப்படாத தொழிற்பாட்டை உறுதிப்படுத்துவதோடு, பெறுகைகளுக்காக வியபாரிகளுடன் இணைந்து செயற்படுவதோடு, புத்தாக்கம், வினைத்திறன்மிக்க மூலவள முகாமைத்துவம் ஊடாக தொடரான மேம்பாடுகளுக்கு ஆதரவளிக்கின்றது.

**கருத்திட்டங்களும் மேம்பாடுகளும்.- 2024 ஆம் ஆண்டு**

1. **மருத்துவர்கள் மற்றும் பல்மருத்துவ அறுவைச் சிகிச்சையாளர்களுக்கான இணையவழி புதுப்பித்தல் முறைமை**




மருத்துவர்கள் மற்றும் பல் அறுவை சிகிச்சை நிபுணர்களுக்கான இணையவழி புதுப்பித்தல் முறைமையானது உரிமம் புதுப்பித்தல் செயல்முறையை நவீனமயமாக்கவும் ஒழுங்குமுறைப்படுத்தவுமாக இலங்கை மருத்துவ மன்றத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு முன்னோடிக் கருத் திட்டமாகும். இந்த முன்னெடுப்பானது, ஒழுங்குறுத்துகை தராதரங்களுடன் உரிய நேர இணக்கப்பாட்டுக்கு வசதியளிக்கின்ற பாதுகாப்பான,வினைத்திறனுடைய மற்றும் பயனர் நட்புடைய டிஜிட்டல் தளமொன்றிற்கான வளர்ந்து வரும் தேவையை நிவர்த்தி செய்கிறது.

இறுதி பயனரை மனதில் கொண்டு வடிவமைக்கப்பட்ட முறைமையானது, மருத்துவர்கள் நேரடியாக விஜயம் அல்லது கடதாசி ஆவணங்களுக்கான தேவை இன்றி புதுப்பித்தல் செயற்பாட்டை இணையவழியாக பூர்த்திசெய்வதற்கு வசதி மற்றும் அணுகலை உறுதி செய்கிறது. renewal.slmc.gov.lk என்ற அனுகுகை தளத்தில், பயனர்களின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்ய மேம்படுத்தப்பட்ட அம்சங்களை ஒருங்கிணைப்பதோடு, தரவு பாதுகாப்பு மற்றும் தொழிற்பாட்டு நம்பகத்தன்மை என்பவற்றின் உயர் தராதரங்களையும் பேணிப் பராமரிக்கிறது.

**நோக்கங்கள்:**

• சுமார் 35,000+ பதிவுசெய்யப்பட்ட மருத்துவர்கள் மற்றும் பல் அறுவை சிகிச்சை நிபுணர்களுக்கான சுமகமான புதுப்பித்தல் செயல்முறையை உறுதி செய்தல்.

• மிகச்சரியான மற்றும் புதுப்பிக்கப்பட்ட மருத்துவர் தரவுத்தளத்தை பேணுதல்.

• புதுப்பித்தல்களில் வெளிப்படைத்தன்மை மற்றும் வினைத்திறனை மேம்படுத்துதல்.

• மருத்துவர்கள் புதுப்பித்தல் செயல்முறையை பூர்த்திசெய்தவுடன் புதுப்பித்தல் மின்-சான்றிதழைப் பதிவிறக்கம் செய்யலாம்.

• மின்-சான்றிதழில் பொறிக்கப்பட்ட QR குறியீட்டைப் பயன்படுத்தி மருத்துவர்கள் மற்றும் பல் அறுவை சிகிச்சை நிபுணர்களின் சரிபார்ப்பை வசதிப்படுத்துதல்.

- புதுப்பித்தல் செயல்முறைக்குப் பிறகு இலங்கை மருத்துவ மன்ற வலைத்தளத்தில் (slmc.gov.lk) கிடைக்கும் பதிவேட்டின் மூலம் மருத்துவர்களின் தரவு புதுப்பிக்கப்பட்டு சரிபார்க்கப்படுவதை உறுதிசெய்யவும்.
- கைமுறை பணிச்சுமை மற்றும் காகித வேலைகளைக் குறைக்கவும்.
- புதுப்பித்தல் முறைமைக்கு 24/7 அணுகலை உறுதி செய்யவும்.
- தரவு பாதுகாப்பு மற்றும் தனியுரிமை இணக்கப்பாட்டை வலுப்படுத்தவும்.
- உரிம புதுப்பித்தல் அங்கிகாரங்களில் ஏற்படும் தாமதங்களைக் குறைக்கவும்.
- இலகு பண செலுத்தல் மற்றும் உறுதிப்படுத்தல் கண்காணிப்பை வசதியளிக்குக

**நோக்கெல்லை**

- உரிமம் புதுப்பித்தலுக்கான முழுமையான இணையவழி முறைமையை விருத்திசெய்தல்.
- கட்டணம் சமர்ப்பிப்பதற்கான பாதுகாப்பான கட்டண நுழைவாயில்களுடன் ஒருங்கிணைத்தல்.
- வெற்றிகரமான புதுப்பித்தலை அடுத்து மருத்துவரின் சுயவிவரங்களுக்கான நிகழ்நேர இற்றைப்படுத்தல்.
- புதுப்பித்தல்களைக் கண்காணிப்பதற்கான விரிவான அறிக்கையிடல்.

**தொழில்நுட்பசார் விபரங்கள்:**

• **தரவுத்தள முகாமைத்துவம்:** பாரிய அளவிலான மருத்துவர் தரவைக் கையாளவும் பாதுகாப்பான பரிவர்த்தனைகளை உறுதி செய்யவும் ஒரு வலுவான, அளவிடக்கூடிய தரவுத்தளம் செயல்படுத்தப்பட்டது.

• **சேவையகங்கள்: சமகாலத்தில்** பயனர் செயல்பாட்டை முகாமைசெய்யவும் முறைமையின் இருப்பை பேணவும் உயர் செயல்திறன் கொண்ட, நம்பகமான சேவையகங்கள் பயன்படுத்தப்பட்டன.

• **பாதுகாப்பு**: உயர் தரத்திலான குறியாக்க முறைகள் மற்றும் பல காரணி அங்கீகார பாதுகாப்பு பயனர் தரவு மற்றும் பரிவர்த்தனைகள்.

**ஒத்துழைப்பு:**

இந்தத் திட்டமானது பதிவாளர், தகவல் தொழிநுட்ப பிரிவு மற்றும் இலங்கை மருத்துவ மன்றத்தின் உள்ள அர்ப்பணிப்புள்ள குழுவின் மிகுந்த ஈடுபாட்டுடன் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு உரிய நேரத்தில் சேவை வழங்குவதையும் தராதர உத்தரவாத்தின் உயர் தராதரங்களைப் பேணுவதையும் உறுதி செய்கிறது.

**செயல்முறை கண்ணோட்டம்:**

மருத்துவர்கள் பாதுகாப்பான சான்றுகளுடன் உள்நுழைந்து, தமது விபரங்களைப் புதுப்பித்து, இணக்கத் தேவைகளை பூர்த்தி செய்து, புதுப்பித்தல் கட்டணங்களை இணையவழிமூலம் சமர்ப்பிக்கிறார்கள். அங்கீகாரத்தை பெற்றதன் பின்னர், உறுதிப்படுத்தல் மின்னஞ்சல்கள் அனுப்பப்படும் என்பதோடு மேலும் புதுப்பிக்கப்பட்ட உரிமங்கள் அவர்களின் சுயவிவரங்களில் இற்றைப்படுத்தப்படும்.

**நன்மைகள்:**

• எந்த இடத்திலிருந்தும் புதுப்பிப்பதற்கான வசதி.

• குறைக்கப்பட்ட ஆவண செயல்முறைகளுடன் ஒழுங்குபடுத்தப்பட்ட நிர்வாகம்.

• மேம்படுத்தப்பட்ட தரவு சரியானதன்மையும் தொழில்பாட்டு வெளிப்படைத்தன்மையும்.

• அனைத்து பதிவுசெய்யப்பட்ட மருத்துவர்கள் மற்றும் பல் அறுவை சிகிச்சை நிபுணர்களின் மையப்படுத்தப்பட்ட, புதுப்பித்த தரவுத்தளம்.

• புதுப்பித்தல் செயல்முறையின் முழுமையான டிஜிட்டல்மயமாக்கல், எளிமை மற்றும் வினைத்திறன்.

• புதுப்பிப்புகளுக்கான செயன்முறை நேரத்தைக் குறைத்து, உரிய நேரத்தில் உரிமம் வழங்குவதை உறுதி செய்கிறது.

• காகித பயன்பாட்டைக் குறைப்பதன் மூலம் சுற்றுச்சூழலுக்கு உகந்த அணுகுமுறை.

• உள்ளுணர்வு அமைப்பு வடிவமைப்பில் மேம்படுத்தப்பட்ட பயனர் அனுபவம்.

• மருத்துவர்களுக்கான நிகழ்நேர புதுப்பிப்புகள் மற்றும் அறிவிப்புகள்.

• முறையான தரவு முகாமைத்துவம் மூலம் வலுப்படுத்தப்பட்ட ஒழுங்குறுத்துகை இணக்கப்பாடு

## இடம்பெற்றுவரும் செயற்பாடுகளும் பராமரிப்பும்

• எதிர்கால அளவிடுதலுக்கு ஏற்ப ஆதரவளிக்கதக்கதாக முறைமை செயலாற்றுகையை கண்காணித்தலும் மேம்படுத்துதலும்.

• பயனர் கருத்து மற்றும் ஒழுங்குறுத்துகை மாற்றங்களை இணைக்க renewal.slmc.gov.lk தளத்திற்கு ஒழுங்குமுறையான இற்றைப்படுத்தல்கள்.

• முறைமையின் உச்ச பயன்பாட்டை உறுதி செய்வதற்காக SLMC பதவியிணர்களுக்கு தொடர்ச்சியான பயிற்சி.

இலங்கை மருத்துவ மன்றமானது, புதுப்பித்தல் செயல்முறையை நெறிப்படுத்துவது மட்டுமல்லாமல், தொழிற்பாட்டு வினைத்திறன் மற்றும் சேவை வழங்கலில் புதிய அளவுகோல்களை அமைக்கும் ஒரு தொடர்ச்சியாக வளர்ந்து வரும் டிஜிட்டல் சுற்றுச்சூழல் முறைமையை அவாக்கொள்கின்றது. பரந்த அளவிலான தொழில்சார் வகுதிகளை உள்ளடக்கியதாக இணையவழி புதுப்பித்தல் முறையை விரிவுபடுத்துவதன் மூலமும், AI- இனால் இயக்கப்படும் பகுப்பாய்வுகளை ஒருங்கிணைப்பதன் மூலமும், மன்றத்தின் தீர்மானமெடுத்தலையும் வள உச்சப்பயன்பாட்டையும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. கைத்தொழில் தலைவர்களுடனான எதிர்கால ஒத்துழைப்புகள் அதிநவீன தொழில்நுட்பத்தை ஏற்றுக்கொள்வதை மேலும் உறுதி செய்யும் என்பதோடு மருத்துவ சமூகத்திற்கு சேவை செய்வதில் சிறந்து விளங்குவதற்கும் புத்தாக்கத்திற்குமான மன்றத்தின் அர்ப்பணிப்பை உறுதிப்படுத்தும்.

## 2. இலங்கை மருத்துவ மன்றத்தின் வட்ஸ்அப் செனலின் அங்குரார்ப்பணம்.




2024 ஆம் ஆண்டில், இலங்கை மருத்துவ மன்றமானது (SLMC), உத்தியோகபூர்வ வட்ஸ்அப் (WhatsApp) செனலைத் ஆரம்பித்த்தன் மூலம் மருத்துவ சமூகத்துடனான தொடர்பாடலை மேம்படுத்துவதில் ஒரு குறிப்பிடத்தக்க கட்டத்திற்கு நகர்ந்தது. இந்த முன்னெடுப்பானது, மருத்துவ தொழில்வல்லுநர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு அணுகல், பதிலளிப்பு மற்றும் அத்தியாவசிய தகவல்களை வழங்குவதை மேம்படுத்த நவீன தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் தளங்களைப் பயன்படுத்துவதற்கான மன்றத்தின் விரிந்த உபாயமுறையின் ஒரு அங்கமாகும். WhatsApp போன்ற பரவலாகப் பயன்படுத்தப்படும் செய்தியிடல் தளத்தைப் பயன்படுத்துவதன் மூலம், தொலைதூர அல்லது பின்தங்கிய பகுதிகளில் உள்ளவர்கள் உட்பட பரந்தளவான வாடிக்கையாளர்களிடம் இது சென்றடைவதை SLMC நோக்கமாகக் கொண்டிருந்த்தோடு இதனூடாக முக்கிய இற்றைப்படுத்தல்கள் மற்றும் அறிவிப்புகள் நிகழ்நேரத்தில் பகிரப்படுவதை உறுதி செய்கிறது.

**சிறப்பம்சங்கள்**




2024 ஜூன் மாதத்தில் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்ட வாட்ஸ்அப் சேனல், தொடர்பாடல் உபாயமுறையை மேம்படுத்துவதற்கான SLMC இன் தொடர்ச்சியான முயற்சிகளில் ஒரு மைல்கல்லாக அமைகின்றது. இந்த வசதி தொடங்கப்பட்டதிலிருந்து, இந்த சேனல் கணிசமான பின்தொடர்பவர்களைப் கொண்டுள்ளதோடு, தற்போதைய அதன் பின்தொடர்பவர்களின் எண்ணிக்கை 20,000 நபர்களை எட்டியுள்ளது. இந்த விரைவான வளர்ச்சி செனலின் பிரபலத்தையும், SLMC இலிருந்து தகவல்களைப் பெறுவதற்கான நேரடி மற்றும் வினைத்திறமையான வழிமுறை தேவையையும் எடுத்துக்காட்டுகிறது.

வட்ஸ்அப் செனலின் பின்னணியில் உள்ள முதன்மை நோக்கம் SLMC மற்றும் அதன் பங்குதாரர்களுக்கு இடையேயான தொடர்பை ஒழுங்குபடுத்துவதாகும். ஒழுங்குறுத்துகை மாற்றங்கள், பரீட்சை அட்டவணைகள், கொள்கை புதுப்பிப்புகள் மற்றும் பிற முக்கியமான செய்திகள் குறித்த நிகழ்நேர இற்றைப்படுத்தல்களை வாடிக்கையாளர்களின் மொபைல் சாதனங்களுக்கு

நேரடியாக அனுப்ப இந்த செனல் SLMC ஐ அனுமதிக்கிறது. மருத்துவ நிபுணர்கள் மற்றும் மாணவர்கள் அண்மைய முன்னேற்றங்கள் குறித்து அறிந்திருப்பதை உறுதி செய்வதில் இந்த உடனடி மற்றும் நேரடி தொடர்பு வழிமுறை விலைமதிப்பற்றதாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

**நோக்கம் மற்றும் தொழிற்பாடு**

**வட்ஸ்அப் செனல் பல நோக்கங்களுக்கு உதவுகிறது, இதில்**

- புதிய வழிகாட்டுதல்கள், கொள்கை மாற்றங்கள் மற்றும் மருத்துவ பரீட்சைகள் அல்லது சான்றிதழ்கள் தொடர்பான அறிவிப்புகள் போன்ற முக்கி ஒழுங்குறுத்துகை இற்றைப்படுத்தல்களை வழங்குதல்.
- மாநாடுகள், செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகள் உட்பட SLMC தொடர்பான நிகழ்வுகள் மற்றும் செயற்பாடுகள் குறித்த உரிய நேர தகவல்களை வழங்குதல்.
- பொதுமக்கள் மற்றும் மருத்துவ நிபுணர்கள் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளுக்கு விரைவான பதில்களைத் தேட ஒரு வினைத்திறன்மிக்க தளத்தை வழங்குதல், விசாரணைகளுக்கான காத்திருப்பு நேரத்தைக் குறைத்தல்.
- SLMC தகவல் தொழிநுட்ப ஆதரவு குழுவுடன் நேரடி தொடர்புக்கு வசதி செய்தல், இது தொழில்நுட்ப சிக்கல்களை விரைவாகத் தீர்க்கவும் விசாரணைகளுக்கு உதவவும் அனுமதிக்கிறது.

**தாக்கம்:**

WhatsApp செனல் அதன் தொடக்கத்திலிருந்தே, SLMC இன் தொடர்பு செயல்திறனை மேம்படுத்துவதில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. WhatsApp இன் நிகழ்நேர இயல்பு, தகவல்களை விரைவாகப் பரப்ப அனுமதிப்பதோடு, வாடிக்கையாளர்கள் முக்கியமான இற்றைப்படுத்தல்களை உடனடியாகப் பெறுவதை உறுதி செய்கிறது. இது SLMC அதன் வாசகர்களுடன் திறமையாக ஈடுபடும் திறனை மேம்படுத்தியுள்ளதோடு அதிக நம்பிக்கை மற்றும் வெளிப்படைத்தன்மையை வளர்த்துள்ளது. மருத்துவ நிபுணர்கள் மற்றும் மாணவர்கள் முக்கியமான தகவல்களை அணுகுவதை இந்த செனல் எளிதாக்கியுள்ளதுடன் மருத்துவ சமூகத்திற்குள் தகவல் தொடர்பு தரத்தில் ஒட்டுமொத்த முன்னேற்றத்திற்கு பங்களிக்கிறது.

மேலும், WhatsApp தளத்தின் ஊடாடும் அம்சங்கள் SLMC நேரடியாக விசாரணைகளை நிவர்த்தி செய்ய உதவியுள்ளதுடன், பயனர்களுக்கு மிகவும் தனிப்பயனாக்கப்பட்ட அனுபவத்தை வழங்குகின்றன. இதன் மூலம் பயனர்கள் தங்கள் கேள்விகளுக்கான பதில்களைப் பெற எடுக்கும் நேரம் குறிப்பிடத்தக்க அளவில் குறைந்துள்ளது, இதனால் தகவல் பரிமாற்றத்திற்கான செனல் மிகவும் வினைத்திறன்மிக்க கருவியாக மாறியுள்ளது.

**எதிர்காலத் திட்டங்கள்:**

எதிர்காலத்தில், SLMC அதன் வாடிக்கையாளர்களுக்கு சிறப்பாக சேவை செய்வதற்காக வட்ஸ்அப் (WhatsApp) செனலை தொடர்ந்து விருத்திசெய்து, மேம்படுத்த திட்டமிட்டுள்ளது. வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது மற்றும் பயனர் ஈடுபாட்டை மேலும் மேம்படுத்துவது என்ற குறிக்கோளுடன், செனலின் அணுகலை விரிவுபடுத்துவதை மன்றம் நோக்கமாகக் கொண்டுள்ளது. வாடிக்கையார்களிடமிருந்து கருத்துக்களைச் சேகரித்து அவர்களின் தேவைகளை நன்கு புரிந்துகொள்ள வீடியோ புதுப்பிப்புகள், ஊடாடும் கருத்துக் கணிப்புகள் மற்றும் அளவாய்வுகள் போன்ற புதிய அம்சங்களை அறிமுகப்படுத்துவது என்பன இத்திட்டங்களில் அடங்குகின்றது.

நீண்ட காலத்தில், SLMC அதன் WhatsApp செனலை மற்ற டிஜிட்டல் தொடர்பு தளங்களுடன் ஒருங்கிணைத்து, அதன் பயனர்களுக்கு மிகவும் விரிவான மற்றும் தடையற்ற அனுபவத்தை உருவாக்க விரும்புகிறது. இந்த ஒருங்கிணைப்பு, மருத்துவத் துறையில் டிஜிட்டல் தகவல்தொடர்புகளில் SLMC முன்னணியில் இருப்பதை உறுதி செய்யும், அனைத்து பங்குதாரர்களுக்கும் நம்பகமான, உரிய நேரத்தில் மற்றும் அணுகக்கூடிய தகவல்களை வழங்கும்.

# சட்டப் பிரிவு
# இலங்கை மருத்துவ

# இலங்கை மருத்துவ மன்றம் சட்டப் பிரிவின் வருடாந்த அறிக்கை - 2024

இலங்கை மருத்துவ மன்றம் தொடர்பான அனைத்து சட்டசார் விடயங்களையும் இப்பிரிவு கையாளுகிறது. அதன் நோக்கெல்லையானது நீதிமன்றத்தில் ஆஜராதல், ஒழுக்காற்று விசாரணைகளை ஆரம்பித்து, நடத்துதல், சட்ட ஆலோசனை மற்றும் சட்ட ஆதரவு வழங்குதல் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. இந்தப் பிரிவானது சட்டத்துறை தலைவர், சட்ட அலுவலர்கள், வழக்குத் தொடுக்கும் அதிகாரி மற்றும் முகாமைத்துவ உதவியாளர்கள் ஆகியோரை உள்ளடக்கியுள்ளது. 2024 ஆம் ஆண்டில், சட்டப் பிரிவு புத்தாக்க நடவடிக்கைகள் மற்றும் மூலோபாய தீர்மானங்களை ஆதரித்தது, இதன் மூலம் சட்ட இணக்கம் மற்றும் வினைத்திறன்மிக்க ஆளுகைக்கான நம்பகமான பங்காளராக எமது நிலையை உறுதிப்படுத்தியது.

இலங்கை மருத்துவ மன்றத்தின் பரந்த வளர்ச்சி நோக்கங்களுடன் எங்களை இணைத்துக் கொள்ளும் அதே வேளையில், கடந்த ஆண்டில், சட்டம் மற்றும் ஆவணப் பிரிவின் ஆற்றல்கள் மற்றும் வினைத்திறனை மேம்படுத்துவதற்கு குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டுள்ளோம்.

சட்டப் பிரிவால் மேற்கொள்ளப்படும் அனைத்து தொழிற்பாடுகளிலும், மருத்துவ மற்றும் பல் மருத்துவர்களுக்கு எதிரான ஒழுக்காற்று விசாரணைகளை ஆரம்பிப்பது மற்றும் நடத்துவது முன்னுரிமை பெறுகிறது. பின்பற்றப்படும் நடைமுறை மருத்துவ ஒழுக்காற்று (நடைமுறை) ஒழுங்குவிதிகள் 1990 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. அமுல்படுத்தப்படும் நடைமுறை பின்வருமாறு:

## முறைப்பாடு

- மருத்துவருக்கு எதிராகக் சார்த்தப்படும் தகவல்கள் அல்லது விடயங்களைக் குறிப்பிட்டு பதிவாளருக்கு முகவரியிட்ட எழுத்துமூல அறிக்கை வடிவில் முறைப்பாடு செய்யப்பட வேண்டும்.
- அத்தகைய முறைப்பாடு/அறிக்கை தொழில்சார் தவறான நடத்தை/அலட்சியம்/தொழில்சார் கடமைகள் தொடர்பான இயலாமையை தொடர்பில் செய்யப்பட்டால் - முறைப்பாட்டில் கூறப்பட்டுள்ள உண்மைகளை உறுதிப்படுத்தும் ஒரு சத்தியக் கடதாசியினால் முறைப்பாடு ஆதரவளிக்கப்படல் வேண்டும்.
- மன்றத்தின் முன் ஒரு முறைப்பாடு செய்யப்பட்டவுடன், அதை PPC முன் வைக்க முதல் தோற்றத்திலே வழக்கெழு காரணி உள்ளதா என்பதை மன்றம் முடிவு செய்யலாம். முதல் தோற்றத்திலே வழக்கெழு காரணி

உள்ளது அடையாளம் காணப்பட்டால், அத்தகைய விடயம் SLMC இன் ஆரம்ப நடவடிக்கைமுறைகள் குழுவின் முன் வைக்கப்படும்.

- முதல் தோற்றத்திலே வழக்கெழு காரணி இல்லாததால் அத்தகைய முறைப்பாடு/அறிக்கை ஆரம்ப நடவடிக்கைமுறைகள் குழுவின் முன் வைக்கப்படாது என்று முடிவு செய்யப்பட்டால், பதிவாளர் அத்தகைய தீர்மானத்தை முறைப்பாட்டாளருக்குத் தெரிவிக்க நடவடிக்கை எடுப்பார்.

## ஆரம்ப நடவடிக்கைமுறை குழு ((PPC) :

PPC இற்கு ஒரு முறைப்பாடு செய்யப்பட்டவுடன் மருத்துவர் அவருக்கு எதிரான முறைப்பாடு பற்றி அறிவிக்கப்படுவார். முன்வைக்கப்பட்ட அனைத்து சத்திய கடதாசிகளதும் பிரதியொன்று மருத்துவருக்கு வழங்கப்படும். மருத்துவர் அத்தகைய முறைப்பாடு அறிக்கை தொடர்பில் ஏதாவது விளக்கமொன்றை சமர்ப்பிப்பதற்கான வாய்ப்பொன்று வழங்கப்படும். குழு அதன் பின்னர் தொடர்புடைய அனைத்து தரப்புகளதும் சான்றை அறிந்து குழு விடயத்தை ஆராய்ந்து தொழில்சார் நடத்தைக் குழுவுக்கு அதன் காண்புகளை உள்ளடக்கிய அறிக்கையொன்றை தயாரித்து சமர்ப்பிக்கும்.

## தொழில்சார் நடத்தை குழு(PCC):

அதாவது, அந்தத் திருத்தம் குறித்த அந்தக் காலப்பகுதிக்கு மாத்திரம் தாக்கத்தை ஏற்படுத்துமாயின் திருத்தப்பட்ட காலக்கட்டத்திலும், அந்தத் திருத்தம் நடப்பு மற்றும் எதிர்காலக் காலகட்டங்கள் ஆகிய இரண்டின் மீதும் தாக்கத்தை ஏற்படுத்துமாயின் திருத்தம் மேற்கொள்ளப்படும் காலப் பகுதி மற்றும் எதிர்காலக் காலப் பகுதியிலும் அது கணக்கில் பதியப்படும். கணக்கீட்டுக் கொள்கைகளைப் ஏற்புடையதாக்கிக் கொள்ளும்போது நிதிக் கூற்றுக்களில் அறிக்கைப்படுத்தப்பட்டுள்ள தொகைகளில் மிக முக்கியமான விளைவுகளை ஏற்படுத்துகின்ற முக்கியமான மதிப்பீட்டிற்குட்படுத்தப்பட்ட துறைகள், நிச்சயமற்ற தன்மை மற்றும் தீர்க்கமான தீர்ப்புகள் பற்றிய தகவல்கள் பின்வருமாறு.

### 2.1.11. அ – குறித்துரைக்கப்பட்ட அனுகூலங்கள் திட்டங்கள்

ஊழியர்களின் குறித்துரைக்கப்பட்ட அனுகூலத் திட்டத்திற்கான செலவானது, திட்டமிடப்பட்ட அலகு வரவு (Projected Unit Credit - PUC) முறையைப் பயன்படுத்தி நிர்ணயிக்கப்படுகிறது. இவ்முறையின்போது கழிவு வீதம் மற்றும் எதிர்கால சம்பள உயர்வு வீதம் போன்ற விடயங்கள் தொடர்பான அனுமானங்கள் பயன்படுத்திக்கொள்ளப்படுகின்றது. இந்தத் திட்டமானது நீண்ட காலத் தன்மையைக் கொண்டிருத்தல் காரணமாக, இத்தகைய மதிப்பீடுகள் குறிப்பிடத்தக்க நிச்சயமற்ற தன்மைக்கு உட்பட்டவையாகும்.

### 2.1.11. ஆ- கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தீர்மானங்களில் மாற்றங்கள்

கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தீர்க்கமான தீர்மானங்களின்போது ஏற்படும் மாற்றங்கள் நிதிக் கூற்றுக்களில் தொடர்புடைய குறிப்புக்களின் கீழ் இனங்கண்டுகொள்ளப்படும்.

### 2.1.11 தொடர்ச்சியான இருப்பு

மன்றத்திற்கு தனது செயற்பாட்டு நடவடிக்கைகளை எதிர்காலத்தில் தொடர முடியும் என்ற அனுமானத்தின் அடிப்படையில் மன்றத்தின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. மேலும், இலங்கை மருத்துவ மன்றத்தின் தொடர்ச்சியான இருப்பு தொடர்பாக குறிப்பிடத்தக்க சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்பான எந்தவொரு அளவுசார் நிச்சயமற்ற தன்மை பற்றிய மன்றம் அறிந்திருக்கவில்லை. எனவே, நிதிக் கூற்றுக்கள் தொடர்ச்சியான இருப்பு எனும் அடிப்படையில் தொடர்ந்து தயாரிக்கப்படுகின்றன.

அறிக்கைப்படுத்தப்படும் காசுத் தொகை மீது தாக்கத்தை ஏற்படுத்தும் மற்றும் இலங்கை மருத்துவ மன்றத்தின் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடத்தக்களவு சீர்படுத்தலுக்கு வழிவகுக்கும் அபாயம் உள்ள தீர்ப்புகள், அனுமானங்கள் மற்றும் மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மைகள் பற்றிய தகவல்கள் பின்வரும் குறிப்புகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன:

அ) சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் (PPE) பயனுள்ள ஆயுட்காலத்தை மதிப்பீடு செய்தல்.

ஆ) வருமான வரி (நடப்பு வரி மற்றும் ஒத்திவைக்கப்பட்ட வரி)

இ) குறித்துரைக்கப்பட்ட அனுகூலங்கள் கடப்பாடு தொடர்பான அளவீடு

ஈ) நிதி ஒதுக்கீடுகள் மற்றும் எதிர்பாராத செலவினங்களை இனங்காணல் மற்றும் அளவீடு: வளங்களின் வெளிப்பாய்வின் நிகழ்தகவு மற்றும் அளவு பற்றிய முக்கிய அனுமானம்

### 2.1.12 நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களின் வகைப்பாடு

இலங்கை மருத்துவ மன்றத்தினால் நிதி நிலைமைக் கூற்றில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் நடைமுறை / நடைமுறை அல்லாத வகைப்பாட்டின் அடிப்படையில் சமர்ப்பிக்கப்படுகின்றது.

ஒரு சொத்து பின்வரும் நிலைகளின்போது நடைமுறைச் சொத்தாக வகைப்படுத்தப்படுகிறது:

அ) சாதாரண செயல்பாட்டுச் சுழற்சியில் காசாக மாற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற, அல்லது விற்கப்படுவதற்கு அல்லது நுகரப்படுவதற்கு என எதிர்பார்க்கப்படும்போது;

ஆ) முதன்மையாக வர்த்தக நோக்கத்திற்காகவே வைத்திருக்கப்படும்போது;

இ) அறிக்கைப்படுத்தும் காலப் பகுதியின் பின்னர் பன்னிரண்டு மாதங்களுக்குள் காசாக்கப்படும் என எதிர்பார்க்கப்படும்போது; அல்லது

ஈ) அறிக்கைப்படுத்தும் காலப் பகுதியின் பின்னர் குறைந்தது பன்னிரண்டு மாதங்கள் கழியும் வரை, பரிமாற்றம் செய்வதற்கோ அல்லது ஒரு பொறுப்பைத் தீர்ப்பதற்கோ வரையறைகள் விதிக்கப்படாத காசு அல்லது காசுக்குச் சமமானவை.

இலங்கை மருத்துவ மன்றத்தினால் ஏனைய அனைத்துச் சொத்துக்களும் நடைமுறையல்லாத சொத்துக்கள் என வகைப்படுத்தப்படும்.

### 2.1.13 நடைமுறைப் பொறுப்புகள் மற்றும் நடைமுறையல்லாத பொறுப்புகளின் வகைப்பாடு

ஒரு பொறுப்பு பின்வரும் நிலைகளில் இருக்கும்போது நடைமுறைப் பொறுப்பாக வகைப்படுத்தப்படுகிறது:

அ) சாதாரண செயல்பாட்டுச் சுழற்சியில் தீர்ப்பதற்கு எதிர்பார்க்கப்படும்போது;

ஆ) முதன்மையாக வர்த்தக நோக்கத்திற்காகவே வைத்திருக்கப்படும்போது;

இ) அறிக்கைப்படுத்தும் காலப் பகுதியின் பின்னர் பன்னிரண்டு மாதங்களுக்குள் தீர்ப்பதற்கு எதிர்பார்க்கப்படும்போது; அல்லது

ஈ) அறிக்கைப்படுத்தும் காலப் பகுதியின் பின்னர் குறைந்தது பன்னிரண்டு மாதங்கள் கழியும் வரை பொறுப்பை தீர்ப்பதற்காக நிபந்தனையற்ற உரிமை இல்லாத போது.

இலங்கை மருத்துவ மன்றத்தினால் ஏனைய அனைத்துப் பொறுப்புக்களும் நடைமுறையல்லாத பொறுப்புக்கள் என வகைப்படுத்தப்படும். ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்புக்கள் நிலவுமாயின் அவை நடைமுறையல்லாத பொறுப்புக்கள் என வகைப்படுத்தப்படும்.

### 2.1.14 காசுப் பாய்ச்சல் கூற்று

காசுப் பாய்ச்சல் கூற்றானது, 'காசுப் பாய்ச்சல் கூற்று' பற்றிய இலங்கை கணக்கீட்டு தரநிலை – LKAS 7 இற்கு இணங்க, "மறைமுக முறை" யைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்டுள்ளது. காசு மற்றும் காசுக்குச் சமமானவை, கையிருப்பு காசு, வங்கியில் உள்ள காசு மற்றும் அறியப்பட்ட காசாக எளிதில் மாற்றக்கூடியதும், மதிப்பு மாற்றங்களுக்கான அற்பமான அபாயத்திற்கு உட்பட்டதுமான குறுகிய கால முதலீடுகள் ஆகியவை அடங்கும்.

காசுப் பாய்ச்சல் கூற்றை சமர்ப்பிக்கும் நோக்கத்திற்காக, பெறப்பட்ட வட்டியானது முதலீட்டுச் செயல்பாடுகளிலிருந்து வரும் காசுப் பாய்ச்சல்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன், செலுத்தப்பட்ட வட்டியானது செயல்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

கோரியவுடன் திருப்பிச் செலுத்தப்பட வேண்டியதும், இலங்கை மருத்துவ மன்றத்தின் நிதி முகாமைத்துவத்தின் கட்டாயமான பகுதியாகவும் உள்ள வங்கி மிகைப் பற்றுக்கள் மற்றும் குறுகிய காலக் கடன்கள், ஏதேனும் இருப்பின், காசுப் பாய்ச்சல் கூற்றின் நோக்கத்திற்காக

காசு மற்றும் காசுக்குச் சமமானவையின் ஒரு கூறாக உள்ளடக்கப்படும்.

## 2.2. கணக்கீட்டுக் கொள்கைகளின் மாற்றங்கள்

முன்னைய ஆண்டில் பயன்படுத்திக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் மன்றத்தினால் இந்த ஆண்டிலும் அதனைப் பின்பற்றி மற்றும் தொடர்ச்சியாக ஏற்புடையதாக்கிக் கொள்ளப்பட்டுள்ளது.

## 2.3. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கை பொழிப்பு

இந்த நிதிக் கூற்றுக்களைத் அறிக்கைகளைத் தயாரிக்கும்போது பயன்படுத்திக்கொள்ளப்பட்ட பிரதான கணக்கீட்டுக் கொள்கைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. வேறுவிதமாகக் குறிப்பிடப்பட்டாலன்றி, இந்தக் கொள்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அனைத்து ஆண்டுகளுக்கும் இயைபான மற்றும் தொடர்ச்சியாக ஏற்புடையதாக்கிக் கொள்ளப்பட்டுள்ளது.

### 2.3.1 சொத்துக்கள் மற்றும் அவற்றை மதிப்பீடு செய்யும் அடிப்படை

### 2.3.1.1. சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

இலங்கை மருத்துவ மன்றத்தினால் சேவைகளை வழங்குதல் மற்றும் நிர்வாக நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்திக்கொள்ளப்படும் ஒரு வருடத்திலும் அதிகளவு காலம் பயன்படுத்திக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற, தமது சொத்துக்களை கணக்கில் பதியும்போது ‘சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்’ பற்றிய LKAS 16 தேவைப்பாடுகள் ஏற்புடையதாக்கிக்கொள்ளப்படும்.

#### 2.3.1.1. (அ) இனங்கண்டுகொள்ளல் மற்றும் அளவீடு

சொத்துக்கள் சார்ந்த எதிர்கால பொருளாதார அனுகூலங்கள் இலங்கை மருத்துவ மன்றத்தினுள் வரும் ஆற்றல் நிலவுமாயின் மற்றும் சொத்துக்களுக்கான செலவுகள் நம்பகத் தன்மையுடன் கணக்கிட முடியுமாயின் சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் இனங்கண்டுகொள்ளப்படும்.

அனைத்து சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கீழான உருப்படிகள் ஆரம்பமாக கிரயத்திற்கமைய அளவிடப்படுவதுடன், பின்னர் திரட்டிய தேய்வு மற்றும் ஏதேனும் சேதங்களுக்கான நட்டங்களை கழித்ததன் பின்னர் கிரயத்திற்கமைய அளவிடப்படும். பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புச் செலவுகள், அவை ஏற்படும் சந்தர்ப்பத்திலேயே விரிவான வருமானக் கூற்றில் இனங்கண்டு கொள்ளப்படுகின்றது. இலங்கை மருத்துவ மன்றமானது சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களுக்கு செலவு மாதிரியை ஏற்புடையதாக்கிக் கொள்வதுடன், இதில் கொள்வனவு அல்லது கட்டுமானச் செலவுகளுடன் அதனோடு தொடர்புடைய செலவுகளையும் உள்ளடக்கி, அதில் திரட்டப்பட்ட தேய்மானம் மற்றும் ஏதேனும் திரட்டப்பட்ட பாதிப்பை ஏற்படுத்தும் நட்டங்களைக் கழித்து அறிக்கைப்படுத்தப்படும். நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் மாற்றங்கள் ஊடான பெறுமதிகளை மீள அறவிட்டுக்கொள்ள முடியாதென சுட்டிக்காட்டும் போதெல்லாம், சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் மதிப்பிழப்புக்குள்ளாகியிருக்கின்றதாவென மீளாய்வுக்குட்படுத்தப்படுகின்றது.

#### 2.3.1.1. (ஆ) அறுதிச் சொத்துக்கள்

சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் உருப்படியொன்றின் கிரயமானது அதன் கொள்வனவு விலை மற்றும் அந்தச் சொத்தை அதன் எதிர்பார்க்கப்படும் பயன்பாட்டிற்காகச் செயற்படும் நிலைக்குக் கொண்டுவருவதற்கு நேரடியாகக் காரணமாகும்

செலவுகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். சுயமாக நிர்மாணிக்கப்பட்ட சொத்துக்களின் கிரயத்தில் பொருட்கள் சார்ந்த கிரயம், நேரடி ஊழியக் கிரயம் மற்றும் அந்தச் சொத்தை அதன் எதிர்பார்க்கப்படும் பயன்பாட்டிற்காகச் செயற்படும் நிலைக்குக் கொண்டுவருவதற்கு நேரடியாக தொடர்புடையதாக்கிக்கொள்ள முடியுமான ஏனைய எந்தவொரு கிரயத்தையும் உள்ளடக்கப்படும். இது தவிர, அந்த உருப்படிகளை அகற்றி நீக்குகின்ற மற்றும் அவை அமைக்கப்பட்டிருந்த இடத்தை மீட்டெடுப்பதற்கான செலவைப் போன்றே தகுதிவாய்ந்த சொத்துக்களுக்கான கடன் வாங்கும் செலவுகளையும் உள்ளடக்கியதாகும். சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் உருப்படியொன்றில் வெவ்வேறு பாகங்கள் வெவ்வேறு பயனுள்ள ஆயுட்காலங்களைக் கொண்டிருக்கும்போது, அவை சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் தனியான உருப்படிகளாக (முக்கிய கூறுகள்) கணக்கில் பதியப்படுகின்றன.

மூன்றாம் தரப்பினரிடமிருந்து உரிமை மாற்றப்பட்ட சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் அவற்றின் நிர்வகிப்பை பெற்றுக்கொள்ளும் திகதியில் நிலவுகின்ற அவற்றின் நியாயமான மதிப்பின் அடிப்படையில் ஆரம்பத்தில் அளவிடப்படும். தொடர்புடைய உபகரணங்களின் செயற்பாட்டுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ள கொள்வனவு செய்யப்பட்ட மென்பொருள்கள் அதே உபகரணத்தின் ஒரு பகுதியாக மூலதனமாக்கப்படுகிறது.

### 2.3.1.1. (இ) குத்தகை (லீசிங்) சொத்துக்கள்

இலங்கை மருத்துவ மன்றத்திற்கு உரிமைக்குரிய அனைத்து ஆபத்துக்கள் மற்றும் அனுகூலங்களை குறிப்பிடத்தக்களவில் ஒப்படைக்கப்படும் குத்தகைக்கு வழங்கல்கள், நிதிசார் குத்தகைகள் என வகைப்படுத்தப்படுகின்றன. ஆரம்ப இனங்காணலின் பின்னர், குத்தகைக்கு விடப்பட்ட சொத்தானது அதன் நியாயமான மதிப்பு அல்லது குறைந்தபட்ச குத்தகை கொடுப்பனவுகளின் தற்போதைய பெறுமதி ஆகிய இரண்டில் குறைந்த பெறுமதிக்கு சமமான தொகையில் அளவிடப்பட்டு மூலதனமாக்கப்படுகிறது. ஆரம்ப இனங்காணலின் பின்னர், அந்தச் சொத்தானது அதற்குப் பொருந்தக்கூடிய கணக்கீட்டுக் கொள்கைக்கிணங்க கணக்கிடப்படுகிறது. இந்த நிதிசார் காலப் பகுதியின் இறுதியில் இலங்கை மருத்துவ மன்றத்திடம் எந்தவொரு குத்தகைச் சொத்துகளும் இருக்கவில்லை.

### 2.3.1.1. (ஈ) பிந்திய செலவுகள்

சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் உருப்படியொன்றின் ஒரு பகுதியை மீளமைப்பதற்கான செலவானது, அந்தப் பகுதியில் உள்ள எதிர்காலப் பொருளாதார அனுகூலங்கள் இலங்கை மருத்துவ மன்றத்திற்கு கிடைப்பதற்கான சாத்தியமொன்று நிலவுமாயின் மற்றும் அதன் கிரயத்தை நம்பகத்தன்மையுடன் அளவிட முடியுமாயின் அந்தப் உருப்படியின் ஏற்புப் பெறுமதியில் இனங்கண்டுகொள்ளப்படும். மீளமைக்கப்பட்ட பகுதியின் ஏற்புப் பெறுமதியை இனங்கண்டு நீக்கப்படுகிறது. சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் அன்றாட சேவைக்கான செலவு, அவை ஏற்படும்போதே விரிவான வருமானக் கூற்றில் இனங்கண்டு கொள்ளப்படும்.

### 2.3.1.1.(உ) இனங்காணப்பட்டு நீக்குதல்

சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களை புறத்தொதுக்கும்போது அல்லது அவற்றின் பயன்பாட்டிலிருந்து எதிர்காலத்தில் எந்தப் பொருளாதாரப் அனுகூலங்களும் எதிர்பார்க்கப்படாதபோது இனங்காணப்பட்டு புறத்தொதுக்கப்படுகின்றன. சொத்து இனங்காணப்பட்டு புறத்தொதுக்கப்படுவதனால் ஏற்படும் எந்தவொரு இலாபம் அல்லது நட்டம் (புறத்தொதுக்குவதன் தேறிய அனுகூலங்கள் மற்றும் சொத்தின் ஏற்புப் பெறுமதி ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடாகக் கணக்கிடப்படுகின்ற), அந்தச் சொத்து

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

### 2024 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்காக

இனங்காணப்பட்டு புறத்தொதுக்கப்படும்ட ஆண்டில் விரிவான வருமானக் கூற்றில் இனங்காணப்படுகின்றது.

**2.3.1.1.(ஊ) தேய்மானம்**

சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் உருப்படியொன்றின் ஒரு பகுதியின் மதிப்பீடு செய்யப்பட்ட பயன்மிக்க ஆயுட்காலம் பூராவும் சரளமான நிரல் அடிப்படையில் விபரமான வருமானக் கூற்றில் இனங்கண்டுகொள்ளப்படும். குத்தகை காலப் பகுதியின் இறுதியில் இலங்கை மருத்துவ மன்றத்தினால் உரிமையைப் பெற்றுக்கொள்வதாக நியாயமான முறையில் உறுதியாக இருந்தாலே தவிர, குத்தகைக்குப் பெறப்பட்ட சொத்துக்கள், குத்தகைக் காலம் அல்லது அவற்றின் பயனுள்ள ஆயுட்காலம் ஆகிய இரண்டில் குறுகிய காலத்தில் தேய்மானத்திற்குட்படுத்தப்படுகின்றது. சொத்தொன்று பயன்படுத்தப்படும்போது அதன் தேய்மானம் ஆரம்பமாவதுடன், அந்தச் சொத்து விற்பனைக்காக வைக்கப்பட்டதாக வகைப்படுத்தப்படும் தேதி அல்லது அந்தச் சொத்து இனங்காணப்பட்டு புறத்தொதுக்கப்படும் தேதி ஆகிய இரண்டில் முந்தைய தேதியில் தேய்மானம் நிறுத்தப்படுகின்றது.

அறுதிக் காணிகள் மற்றும் மேற்கொள்ளப்பட்டுவருகின்ற மூலதன நடவடிக்கைகளுக்கு தேய்மானம் அறவிடப்படுவதில்லை. மதிப்பீடு செய்யப்பட்ட பயன்மிக்க ஆயட்காலம் கீழுள்ளவாறாகும்:

| சொத்து வகைகள் | பயன்மிக்க ஆயட்காலம் (வருடங்கள்) |
|---|---|
| கட்டிடங்கள் | 20 வருடங்கள் |
| தளபாடங்கள் மற்றும் பொருத்துகைகள் | 4 வருடங்கள் |
| அலுவலக உபகரணங்கள் | 4 வருடங்கள் |
| ஏனைய உபகரணங்கள் | 4 வருடங்கள் |
| தொலைபேசி அமைப்பு | 4 வருடங்கள் |
| கணனிகள் | 4 வருடங்கள் |
| மாதிரிகாட்டி மற்றும் பரீட்சை வழிகாட்டி (Simulators and Examination Trainer) | 4 வருடங்கள் |
| வாகனங்கள் | 5 வருடங்கள் |

வணிகத் திட்டங்கள் மற்றும் உபாயவழிகள், எதிர்பார்க்கப்படும் பயன்பாட்டு மட்டம் மற்றும் எதிர்கால மேம்பாடுகள் போன்ற காரணிகளின் அடிப்படையில், இலங்கை மருத்துவ மன்றமானது சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் மதிப்பீடு செய்யப்பட்ட பயனுள்ள ஆயுட்காலத்தை ஆண்டுதோறும் மீளாய்வு செய்கின்றது. மேற்கூறிப்பிடப்பட்ட காரணிகளில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக இந்த மதிப்பீடுகளில் ஏற்படும் மாற்றங்கள் ஊடாக எதிர்கால செயற்பாட்டு விளைவுகள் கணிசமாகப் பாதிக்கக்கூடும். சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் மதிப்பீடு செய்யப்பட்ட பயனுள்ள ஆயுட்காலம் குறைவதனூடாக அறிக்கைப்படுத்தப்பட்ட தேய்மானக் கட்டணம் அதிகரிப்பதுடன், சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் இருப்பைக் குறைக்கிறது.

சொத்தொன்றின் எஞ்சிய மதிப்பு அல்லது பயனுள்ள ஆயுட்காலம் மாறியுள்ளது என்பதற்கான அறிகுறிகள் இருக்கும்போது, சொத்துக்களின் தேய்மான முறை மற்றும் எஞ்சிய மதிப்புகள் மீளாய்வு செய்யப்படும். தற்போதைய எதிர்பார்ப்புகளில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டிருந்தால், அந்த மாற்றங்களைப் பிரதிபலிக்கும் வகையில் எஞ்சிய மதிப்பு, தேய்மான

முறை அல்லது பயனுள்ள ஆயுட்காலம் திருத்தப்படும்.

**2.3.1.1. (எ) மேற்கொள்ளப்பட்டுவரும் மூலதனப் பணிகள் - சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

அறிக்கைப்படுத்தப்படும் திகதியன்று நிறைவு செய்யப்படாத, ஆனாலும் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மூலதனச் செலவினங்கள், மேற்கொள்ளப்பட்டுவரும் மூலதனப் பணிகளாக குறிப்பிடப்படுவதுடன், அதேபோன்று ஆண்டில் நிறைவு செய்யப்பட்டு பயன்படுத்தப்படவிருக்கும் மூலதனச் சொத்துக்கள் சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களுக்கு ஒதுக்கப்படுகின்றன. அதாவது, இலங்கை மருத்துவ மன்றத்தினால் எதிர்பார்க்கப்பட்ட விதத்தில் செயற்படுவதற்குத் தேவையான இடத்திலும் நிலையிலும் அவை இருக்கும்போதாகும்.

**2.3.1.2. அருவச் சொத்துக்கள்**

தனித்தனியாக கையகப்படுத்திக்கொள்ளப்பட்ட அருவச் சொத்துக்கள் ஆரம்ப இனங்காணலின்போது கிரய விலையில் அளவிடப்படுகின்றன. ஆரம்ப இனங்காணலின் பின்னர், அருவச் சொத்துக்கள், திரட்டப்பட்ட தேய்மானம் மற்றும் திரட்டப்பட்ட இழப்பு நட்டங்கள் கழிக்கப்பட்ட கிரயத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

அருவச் சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் வரையறுக்கப்பட்ட வகையில் மதிப்பீடு செய்யப்படுகிறது. வரையறுக்கப்பட்ட ஆயுட்காலத்துடனான அருவச் சொத்துக்கள் அவற்றின் பயனுள்ள பொருளாதார ஆயுட்காலம் பூராவும் தேய்மானம் செய்யப்படுவதுடன், மேலும் அந்த அருவச் சொத்து பாதிப்படைந்திருக்கலாமென உணரப்படும் சகல சந்தர்ப்பங்களிலும், இருக்கும்போதெல்லாம் பாதிப்படைந்திருக்கின்றதாவென மதிப்பீடு செய்யப்படுகின்றது. வரையறுக்கப்பட்ட பயன்மிக்க ஆயுட்காலத்தைக் கொண்ட ஒரு அருவச் சொத்துக்கான தேய்மானக் காலம் மற்றும் தேய்மானத்தை அளவிடும் முறை ஆகியவை குறைந்தபட்சம் ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் மதிப்பாய்வு செய்யப்படுகின்றன. சொத்தில் பொதிந்துள்ள எதிர்காலப் பொருளாதார அனுகூலங்கள் எதிர்பார்க்கப்படும் நுகர்வு முறையிலோ அல்லது எதிர்பார்க்கப்படும் பயனுள்ள ஆயுட்காலத்திலோ ஏற்படும் மாற்றங்கள், பொருத்தமான பிரகாரம் தேய்மானக் காலப் பகுதி அல்லது தேய்மான முறையையோ மாற்றுவதன் மூலம் கணக்கில் பதியப்படுவதுடன், அவை கணக்கீட்டு மதிப்பீடுகளில் ஏற்படும் மாற்றங்களாகக் கருதப்படுகின்றன. வரையறுக்கப்பட்ட ஆயுட்காலம் கொண்ட அருவச் சொத்துக்களுக்கான தேய்மானச் செலவு, அந்த அருவச் சொத்தின் செயற்பாட்டிற்குப் பொருத்தமான செலவின வகையின் கீழ் விரிவான வருமானக் கூற்றில் இனங்கண்டுகொள்ளப்படுகிறது.

**2.3.1.2. (அ) கணனி மென்பொருள்கள்**

கையகப்படுத்திக் கொள்ளப்பட்ட கணினி மென்பொருள் அனுமதிப் பத்திரங்கள், அவற்றைக் கையகப்படுத்திக்கொள்வதற்கு மற்றும் பயன்பாட்டிற்குத் தயார் செய்வதற்கு ஏற்பட்ட செலவுகளின் அடிப்படையில் மூலதனமாக்கப்படுகின்றன. இந்தச் செலவுகள், அவற்றின் மதிப்பிடப்பட்ட நான்கு வருடப் பயனுள்ள ஆயுட்காலம் பூராவும் தேய்மானத்திற்கு உட்படுத்தப்படுகின்றன. கணினி மென்பொருள் நிகழ்ச்சித் திட்டங்களைப் பராமரித்தலுடன் தொடர்புடைய செலவுகள், அவை ஏற்படும்போது ஒரு செலவாக இனங்காணப்படுகின்றன.

அருவச் சொத்துக்களாக இனங்கண்டுகொள்ளப்படும் செலவுகள், அவற்றின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட்காலத்தில் தேய்மானம் செய்யப்படுகின்றன. மென்பொருள் மேம்பாட்டுடன் தொடர்புடைய செலவுகள், மென்பொருள் பயன்பாட்டிற்குத் தயாராகும் வரை மேற்கொள்ளப்பட்டுவரும் மூலதனப் பணிகளாக கொண்டு செல்லப்படும்.

**2.3.1.3. மருத்துவக் கல்விக்கான உலக சம்மேளத்தின் (WFME) அங்கீகாரம்**

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்
### 2024 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்காக

இலங்கை மருத்துவ மன்றத்தின் அங்கீகரிப்புப் பிரிவு, 2023 ஆம் ஆண்டில் ரூ. 34,328,201.37 செலவில் மதிப்புமிக்க மருத்துவக் கல்விக்கான உலக சம்மேளனத்தின் (WFME) அங்கீகாரத் தகுதியைப் பெற்றுக்கொண்டதுடன், அது 2033 மார்ச் 31 வரை செல்லுபடியாகும். மருத்துவக் கல்விக்கான உலக சம்மேளனத்தின் அங்கீகாரம், நிதி நிலைமைக் கூற்றில் தனித் தனியாக அருவச் சொத்தாக இனங்கண்டுகொள்ளப்படுவதுடன், 10 ஆண்டு காலத்திற்குள் தேய்மானம் செய்யப்படுகிறது.

### 2.3.1.4. நிதி அல்லாத சொத்துக்களின் சேதம்

சொத்தொன்று சேதமடைந்திருக்கலாமென்பதற்கான ஏதேனும் அறிகுறி உள்ளதா என்பதை இலங்கை மருத்துவ மன்றம் ஒவ்வொரு அறிக்கைப்படுத்தல் தேதியில் மதிப்பிடுகிறது. அத்தகைய அறிகுறி இருக்குமாயின் அல்லது ஒரு சொத்திற்கு வருடாந்த மதிப்பிழப்பு சோதனை தேவைப்படும்போது, இலங்கை மருத்துவ மன்றம் அந்த சொத்தின் மீட்கக்கூடிய தொகையை மதிப்பிடுகிறது.

ஒரு சொத்தின் மீட்கக்கூடிய பெறுமதி என்பது, அச்சொத்தின் விற்பனைக் கிரயத்தை கழித்ததன் பின்னர் கிடைக்கும் நியாயமான பெறுமதி மற்றும் அதன் பயன்பாட்டுப் பெறுமதி ஆகியவற்றில் அதிக பெறுமதி என்பதுடன், சொத்தொன்றினூடாக ஏனைய சொத்துக்கள் அல்லது சொத்துக்களிலிருந்து அநேகமாக சுயாதீனமான பண ஈட்டல்களை பிறப்பிக்காவிட்டாலன்றி, இந்தத் தொகை ஒரு தனிப்பட்ட சொத்திற்காக நிர்ணயிக்கப்படுகிறது.

சொத்தொன்றின் ஏற்புப் பெறுமதி அதன் மீட்கக்கூடிய தொகையை விட அதிகமாகும்போது, அந்தச் சொத்து மதிப்பிழந்ததாகக் கருதப்படுவதுடன், அது அதன் மீட்கக்கூடிய தொகைக்கு மதிப்பிறக்கம் செய்யப்பட்டு பதியப்படுகிறது. பயன்பாட்டு பெறுமதியை மதிப்பீடு செய்யும்போது, பணத்தின் கால மதிப்பு மற்றும் சொத்துக்குரிய ஆபத்து குறித்த தற்போதைய சந்தை மதிப்பீடுகளைப் பிரதிபலிக்கும் ஒரு கழிவு விகிதத்தைப் பயன்படுத்தி, மதிப்பிடப்பட்ட எதிர்காலப் காசுப் பாய்ச்சல்கள் அவற்றின் தற்போதைய மதிப்பிற்குத் கழிவு செய்யப்படுகின்றன. தொடர் செயல்பாடுகளிலிருந்து ஏற்படும் மதிப்பிழப்பு நட்டங்கள் மதிப்பிழந்த சொத்தின் செயல்பாட்டிற்குப் பொருத்தமான செலவின வகைகளில், விரிவான வருமானக் கூற்றில் இனங்கண்டு கொள்ளப்படுகின்றது.

முன்னர் இனங்கண்டுகொள்ளப்பட்ட ஒரு மதிப்பிழப்பு நட்டமொன்று கடைசியாக அங்கீகரிக்கப்பட்ட மதிப்பிழப்பு இழப்பிற்குப் பிறகு, சொத்தின் மீட்கக்கூடிய தொகையை நிர்ணயிக்கப் பயன்படுத்தப்பட்ட மதிப்பீடுகளில் மாற்றம் ஏற்பட்டிருந்தால் மாத்திரமே மீளத் திருப்பப்படும். அவ்வாறு இருந்தால், சொத்தின் ஏற்புப் பெறுமதி அதன் மீட்கக்கூடிய தொகைக்கு அதிகரிக்கப்படும். அவ்வாறு அதிகரிக்கப்பட்ட பெறுமதி முந்தைய ஆண்டுகளில் குறித்த சொத்துக்கு எந்த மதிப்பிழப்பு நட்டமும் இனங்காணப்படாத பட்சத்தில், தேய்மானத்திற்குப் பிறகு நிர்ணயிக்கப்பட்டிருக்கக்கூடிய பெறுமதியை ”விஞ்சுவதற்கு’’ முடியாது. இத்தகைய ஒரு தலைகீழ் மாற்றம் விரிவான வருமானக் கூற்றில் இனங்கண்டுகொள்ளப்படுகின்றது.

## 2.3.1.5. நிதிச் சொத்துக்கள் - ஆரம்ப இனங்காணல் மற்றும் அளவீடு

### 2.3.1.5. (அ) நிதிச் சொத்துக்கள்

நிதிச் சொத்துக்கள், அவற்றின் ஒப்பந்த காசுப் பாய்ச்சல் பண்புகள் மற்றும் அவற்றை நிர்வகிப்பதற்கான இலங்கை மருத்துவ மன்றத்தின் வணிக மாதிரி ஆகியவற்றின் அடிப்படையில் ஆரம்ப இனங்காணலின்போது வகைப்படுத்தப்படுகின்றன. இலங்கை மருத்துவ மன்றத்தினால் நடைமுறை மாற்று வழியைப் பின்பற்றியுள்ள, குறிப்பிடத்தக்க நிதிக் கூறுகளைக் கொண்டிராத வர்த்தகப் பெறத்தக்கவைகளைத் தவிர, ஏனைய நிதிச் சொத்துக்களை அவற்றின் நியாயமான பெறுமதியில் மற்றும் பரிவர்த்தனைச் செலவுகள் ஆகியவற்றின் பெறுமதிசேர் மதிப்பின் அடிப்படையில் ஆரம்பமாக அளவிடப்படுகின்றது.

இலங்கை மருத்துவ மன்றத்தினால் நடைமுறை மாற்று வழியைப் பின்பற்றியுள்ள, குறிப்பிடத்தக்க நிதிக் கூறுகளைக் கொண்டிராத வர்த்தகப் பெறத்தக்கவைகள், இலங்கை நிதி அறிக்கைப்படுத்தல் தரநிலை 15 (SLFRS 15) இன் கீழ் தீர்மானிக்கப்படும் பரிவர்த்தனை விலையில் அளவிடப்படுகின்றது. நிதிச் சொத்தொன்று பெறுமதி தேய்வுச் செலவின் அடிப்படையில் அல்லது OCI ஊடாக நியாயமான மதிப்பில் வகைப்படுத்தி அளவிடுவதற்காக, அது நிலுவையில் உள்ள மூலதனத் தொகையின் மீது “மூலதனம் மற்றும் வட்டி செலுத்துதல்கள் மாத்திரம்“ எனும் காசுப் பாய்ச்சல்களை உருவாக்குவதற்கு அவசியமாகும்.

நிதிச் சொத்துக்களை நிர்வகிப்பதற்கான இலங்கை மருத்துவ மன்றத்தின் வணிக மாதிரி என்பது காசுப் பாய்ச்சல்களை உருவாக்குவதற்காக அது நிதிச் சொத்துக்களை நிர்வகிக்கும் முறையைக் குறிக்கின்றது. இந்த வணிக மாதிரியானது, ஒப்பந்தப் காசுப் பாய்ச்சல்களைச் சேகரிப்பதன் மூலம், நிதிச் சொத்துக்களை விற்பதன் மூலம், அல்லது இவ்விரண்டின் கலவையின் மூலம் காசுப் பாய்ச்சல்கள் உருவாக்கப்படுகின்றனவா என்பதைத் தீர்மானிக்கிறது. இனங்காணப்பட்ட தொகையை ஈடு செய்வதற்கு தற்போது அமுல்படுத்துவதற்கு முடியுமான சட்டப்பூர்வமான உரிமையொன்று இருக்குமாயின் மற்றும் நிகர அடிப்படையில் ஈடு செய்வதற்கு அல்லது சொத்தை அடைதல் மற்றும் பொறுப்பைத் தீர்த்தல் ஒரே நேரத்தில் தீர்க்கும் நோக்கம் இருந்தால் மாத்திரம் நிதிச் சொத்துக்களும் நிதிப் பொறுப்புகளும் ஈடுசெய்யப்பட்டு, அதன் நிகரத் தொகை நிதி நிலைமைக் கூற்றில் அறிக்கைப்படுத்தப்படுகின்றது.

இலங்கை மருத்துவ மன்றத்தின் நிதிச் சொத்துக்களில் பெறத்தக்கவைகள், ஆளணிக் கடன்கள் மற்றும் முற்பணங்கள், ஒப்பந்தப் பணப் பாய்ச்சல்களைச் சேகரிப்பதற்கான நிலையான வைப்புகள், அரசாங்க பாதுகாப்பு பத்திரங்கள், மீள் கொள்வனவு ஒப்பந்தங்கள், மற்றும் காசு மற்றும் காசுக்குச் சமமானவை ஆகியன உள்ளடங்கும். பின்வரும் இரண்டு நிபந்தனைகளும் பூர்த்தி செய்யப்படும் அடிப்படையில், இலங்கை மருத்துவ மன்றத்தின் நிதிச் சொத்துக்கள் பெறுமதி தேய்மானச் செலவில் அளவிடப்படுகின்றன:

அ) ஒப்பந்த காசுப் பாய்ச்சல்களைச் சேகரிக்கும் நோக்கத்துடன் நிதிச் சொத்துக்களை ஒரு வணிக மாதிரியில் வைத்திருத்தல் மற்றும்

ஆ) நிதிச் சொத்துக்களின் ஒப்பந்த விதிமுறைகள் ஊடாக குறிப்பிட்ட தேதிகளில் நிலுவையில் உள்ள மூலதனத் தொகையின் மீது “மூலதனம் மற்றும் வட்டி செலுத்துதல்கள் மாத்திரம்“ என்ற காசுப் பாய்ச்சல்களை உருவாக்குதல்.

அதற்கமைய, பெறுமதி தேய்மானச் செலவின் கீழான நிதிச் சொத்துக்கள், பின்னர் பயனுள்ள வட்டி வீத (EIR) முறையைப் பயன்படுத்தி அளவிடப்படுவதுடன் அவை மதிப்பிழப்புக்கு உட்பட்டவையாகும். சொத்தின் இனங்காணலை இரத்துச் செய்யும்போது, மாற்றம் அல்லது மதிப்பிழப்பு ஆகியவற்றால் கிடைக்கும் இலாபங்கள் மற்றும் நட்டங்கள் இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றன.

**2.3.1.5. (i) முதலீட்டுக் கொள்கை:**

நிதிகள் அரசாங்க பாதுகாப்பு பத்திரங்கள் மற்றும் அரசாங்க வங்கிகளில் நிலையான வைப்புகளில் மாத்திரம் முதலீடு செய்யப்படுகின்றன. முதலீட்டின் மீதான அதிக வருமானம், திரவத் தன்மை மற்றும் மீள் முதலீட்டிற்கான வட்டி வீத ஆபத்து ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டதன் பின்னரே முதலீடுகள் செய்யப்படுகின்றன. அனைத்து புதிய முதலீடுகள் மற்றும் மீள் முதலீட்டு தீர்மானங்களுக்கும் முகாமைத்துவக் குழுவின் அங்கீகாரம் தேவையாகும்.

**2.3.1.5. (ii) காசு மீளப் பெறல் கொள்கை:**

முதிர்ச்சியடையும்போது தவிர ஏனைய சந்தர்ப்பங்களில் காசு மீளப் பெறப்பட மாட்டாது. எந்தவொரு முன்கூட்டியே காசு மீளப் பெறுவதற்காக முகாமைத்துவக் குழு மற்றும் சபையின் அங்கீகாரம் தேவையாகும்.

**2.3.1.5. (ஆ) நிதிசார் பொறுப்புக்கள்**

இலாபம் அல்லது நட்டத்தின் மூலம் நியாயமான பெறுமதியின் கீழான நிதசார் பொறுப்புக்கள் தவிர, அனைத்து நிதிசார் பொறுப்புகளும் தேய்மானக் கிரயத்தின் அடிப்படையில் அளவிடப்படுகின்றன. 2024 டிசம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டிற்காக செலுத்த வேண்டியவை தவிர ஏனைய நிதிசார் பொறுப்புக்கள் இலங்கை மருத்துவ மன்றத்திடம் இல்லை.

**2.3.1.6. வர்த்தகம் மற்றும் ஏனைய பெறப்பட வேண்டியவை**

வர்த்தக பெறப்பட வேண்டியவை, வாராக்கடன்கள் மற்றும் சந்தேகத்திற்கிடமான பெறப்பட வேண்டியவைகளுக்கான ஒதுக்கீடுகளைக் கழித்த பின்னர் அடைந்துகொள்வதற்கு மதிப்பிடப்பட்ட தொகைகளில் குறிப்பிடப்படுகின்றன.

ஏனைய பெறப்பட வேண்டியவை மற்றும் தொடர்புடைய தரப்பினரிடமிருந்து பெறப்பட வேண்டிய காசு, வாராக்கடன்கள் மற்றும் சந்தேகத்திற்கிடமான பெறத்தக்கவைகளுக்கான ஒதுக்கீடுகளைக் கழித்த செலவில் இனங்காணப்படுகின்றன.

**2.3.1.7. காசு மற்றும் காசுக்குச் சமமானவை**

காசு மற்றும் காசுக்குச் சமமானவை என்பது, கையிருப்புக் காசு, தேவை வைப்புக்கள் மற்றும் பெறுமதியில் ஏற்படும் மாற்றங்களுக்கான மிகக் குறைந்த அபாயத்திற்கு உட்பட்ட, அறியப்பட்ட காசாக எளிதில் மாற்றக்கூடிய குறுகிய கால, அதிக திரவத் தன்மை கொண்ட முதலீடுகள் ஆகும்.

பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் கூற்றின் நோக்கத்திற்காக, காசு மற்றும் காசுக்குச் சமமானவை கையிருப்புக் காசு மற்றும் வங்கி நிலுவையில் உள்ள வங்கி மிகை பற்றுக்களை கழித்ததன் பின்னர் கிடைக்கும் வங்கி வைப்புக்களை உள்ளடக்கியதாகும். அதாவது, கையகப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்கள் அல்லது அதற்கும் குறைவான குறுகிய கால முதிர்வுகளைக் கொண்ட முதலீடுகளும் காசு மற்றும் காசுக்குச் சமமானவையாகக் கருதப்படுகின்றது

### 2.3.2. பொறுப்புக்கள் மற்றும் நிதி ஒதுக்கீடுகள்

பொறுப்பொன்றை இயல்பான செயல்பாட்டுச் சுழற்சியில் தீர்க்கப்படும் என்று எதிர்பார்க்கப்படும்போது ; முதன்மையாக வர்த்தக நோக்கத்திற்காக வைத்திருக்கப்படும்போது; அறிக்கைப்படுத்தல் காலத்திற்குப் பின்னர் பன்னிரண்டு மாதங்களுக்குள் தீர்க்கப்பட வேண்டியதாக இருக்கும்போது ; அல்லது அறிக்கைப்படுத்தல் காலத்திற்குப் பின்னர் குறைந்தது பன்னிரண்டு மாதங்களுக்காவது பொறுப்பின் தீர்வைத் தள்ளிவைப்பதற்கு நிபந்தனையற்ற உரிமையைக் கொண்டிருக்காதபோது, அது நடைமுறைப் பொறுப்பாக வகைப்படுத்தப்படுகிறது. இலங்கை மருத்துவ மன்றம் ஏனைய அனைத்துப் பொறுப்புகளையும் நடைமுறையல்லாத பொறுப்புகளாக வகைப்படுத்துகிறது.

### 2.3.2.1. ஒத்திவைக்கப்பட்ட வருமானம்

ஒத்திவைக்கப்பட்ட வருமானம் பின்வருவனவற்றிலிருந்து ஏற்படுகின்றது;

### 2.3.2.1. (அ) அங்கத்தவர் பதிவுகளைப் புதுப்பித்தல் மற்றும் மீளமைத்தல்

இலங்கை மருத்துவ மன்றத்தினால் அங்கத்தவர் பதிவுகளுக்காக ஐந்தாண்டு காலத்தினை முன்னோக்கி உள்ளடக்கியவாறு புதுப்பித்தல் மற்றும் மீளமைத்தல் கட்டணங்கள் அறவிடப்படுகின்றன. அதன்படி, அத்தகைய வரவுகள் ஆரம்பத்தில் ஒத்திவைக்கப்பட்ட வருமானமாக இனங்காணப்படுகின்றன.

அதன் பின்னர், வருடாந்தம் மொத்தக் கட்டணத்தில் ஐந்தில் ஒரு பங்கு (1/5) என்ற வீதத்தில் நிரல் அடிப்படையில் விரிவான வருமானக் கூற்றில் இனங்கண்டுகொள்ளப்படுகிறது. மீதமுள்ள காலத்தில் அது வருமானமாக இனங்காணப்படும் வரை, எதிர்கால காலப் பகுதிகளுடன் தொடர்புடைய ஈட்டப்படாத பகுதி, நடைமுறை மற்றும் நடைமுறை அல்லாத பொறுப்புகளுக்கு இடையில் வகைப்படுத்தப்பட்டு, நிதி நிலைமைக் கூற்றில் ஒரு பொறுப்பாகக் கொண்டு செல்லப்படுகிறது.

### 2.3.2.1. (ஆ) வெளிநாட்டு மருத்துவக் கல்லூரிகளை அங்கீகரித்தல்

வெளிநாட்டு மருத்துவ மற்றும் பல் மருத்துவக் கல்லூரிகளின் மதிப்பீட்டிற்காக, மன்றத்தினால் படிவம் 1 மற்றும் படிவம் 2 ஆகியவற்றை உள்ளடக்கிய இரண்டு கட்டங்களைக் கொண்ட மதிப்பீட்டு செயல்முறை பின்பற்றப்படுகின்றது. இந்த செயல்முறையின் கீழ் வழங்கப்படும் அங்கீகாரம் ஐந்து வருட காலத்திற்கு செல்லுபடியாகும். அதன்படி, படிவம் 1 மற்றும் படிவம் 2 மதிப்பீடுகள் தொடர்பாக அறவிடப்படும் கட்டணங்கள் ஆரம்பத்தில் ஒத்திவைக்கப்பட்ட வருமானமாக இனங்காணப்படுகின்றது.

ஐந்து வருட அங்கீகாரக் காலப் பகுதி பூராவும் வருடாந்தம் ஐந்தில் ஒரு பங்கு (1/5) என்ற வீதத்தில் நிரல் அடிப்படையில் விரிவான வருமானக் கூற்றில் இனங்கண்டுகொள்ளப்படுகிறது. எதிர்கால காலப் பகுதிகளுடன் தொடர்பான ஈட்டப்படாத பகுதி, அது வருமானமாக இனங்காணப்படும் வரை நடைமுறை மற்றும் நடைமுறை அல்லாத பொறுப்புகளுக்கு இடையில் வகைப்படுத்தப்பட்டு, நிதி நிலைமைக் கூற்றில் ஒரு பொறுப்பாகக் கொண்டு செல்லப்படுகிறது.

## 2.3.2.2. நிதி ஒதுக்கீடு

கடந்தகால நிகழ்வொன்றின் விளைவாக மன்றத்திற்கு ஒரு நிகழ்கால கடப்பாடு (சட்டப்பூர்வமான அல்லது அமைக்கப்பட்ட) இருக்கும்போதும், அந்தக் கடப்பாட்டைத் தீர்ப்பதற்குப் பொருளாதார அனுகூலங்களை உள்ளடக்கிய வளங்களின் வெளிப்பாய்வு தேவைப்படுவதற்கான வாய்ப்புக் காணப்படுகின்ற மற்றும் கடப்பாட்டின் தொகையை நம்பகமான முறையில் மதிப்பிட முடியுமான சந்தர்ப்பங்களில் ஒதுக்கீடு இனங்காணப்படுகிறது. பணத்தின் காலத்திற்குரிய மதிப்பின் தாக்கம் குறிப்பிடத்தக்கதாக இருந்தால், பணத்தின் கால மதிப்பு மற்றும், பொருத்தமான பிரகாரம் கடப்பாட்டிற்குரிய குறிப்பிட்ட ஆபத்துக்கள் குறித்த தற்போதைய சந்தை மதிப்பீடுகளைப் பிரதிபலிக்கும் வரிக்கு முந்தைய சதவீதத்தைப் பயன்படுத்தி, எதிர்பார்க்கப்படும் எதிர்காலப் காசுப் பாய்ச்சல்களை கழிவு செய்வதன் மூலம் ஒதுக்கீடு தீர்மானிக்கப்படுகிறது. கழிவு பயன்படுத்தப்படும்போது, காலம் செல்வதால் ஒதுக்கீட்டில் ஏற்படும் அதிகரிப்பு வட்டிச் செலவாக இனங்கண்டு கொள்ளப்படுகிறது.

## 2.3.2.3. ஊழியர் அனுகூலங்கள்

### (அ) ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - பணிக்கொடை

ஊழியர் ஓய்வூதியத் திட்டம் என்பது வரைவிலக்கணப்படுத்தப்பட்ட பங்களிப்புத் திட்டத்திற்குப் புறம்பான பணிக்குப் பிந்தைய ஒரு அனுகூலத் திட்டமாகும். இந்த வரையறுக்கப்பட்ட அனுகூலம், திட்டமிடப்பட்ட அலகு வரவு (PUC) முறையைப் பயன்படுத்தி கணக்கிடப்படுகிறது. வரையறுக்கப்பட்ட அனுகூலங்கள் கடப்பாட்டின் தற்போதைய மதிப்பானது, அனுகூலங்கள் செலுத்தப்படும் நாணயத்தில் குறிப்பிடப்பட்ட மற்றும் தொடர்புடைய கடப்பாட்டின் காலப் எல்லைகளுக்கு அண்மிய முதிர்வுக் கால எல்லைகளைக் கொண்ட வட்டி வீதங்களைப் பயன்படுத்தி மதிப்பிடப்பட்ட எதிர்காலப் காசுப் பாய்ச்சல்களை கழிவு செய்வதன் மூலம் தீர்மானிக்கப்படுகிறது.

வரைவிலக்கணப்படுத்தப்பட்ட அனுகூலங்கள் கடப்பாட்டின் தற்போதைய மதிப்பானது, கழிவு வீதம், எதிர்காலச் சம்பள ஏற்றங்கள் மற்றும் இறப்பு வீதங்கள் குறித்த பல அனுமானங்களைப் பயன்படுத்தி, காப்புறுதிக் கணிப்பியல் அடிப்படையில் தீர்மானிக்கப்படும் பல காரணிகளைச் சார்ந்துள்ளது. இந்தத் திட்டங்களின் நீண்ட காலத் தன்மை காரணமாக, இத்தகைய மதிப்பீடுகள் குறிப்பிடத்தக்க நிச்சயமற்ற தன்மைக்கு உட்பட்டவையாகும். அனைத்து அனுமானங்களும் ஒவ்வொரு அறிக்கை தேதியிலும் மதிப்பாய்வு செய்யப்படுகின்றன.

பணிக்கொடைக்கான இலங்கை மருத்துவ மன்றத்தின் கணக்கீட்டுக் கொள்கையானது, ஆயுட்கால எதிர்பார்ப்பு இலாபங்களையும் நட்டங்களையும் அவை நிகழும் காலக்கட்டத்தில் ஏனைய விரிவான வருமானக் கூற்றில் முழுமையாக இனங்கண்டுகொள்வதாகும்.

ஊழியர் ஓய்வூதியத் திட்டத்தினூடாக ஊழியரொருவர் ஓய்வு பெறும்போது அவர் பெறும் அனுகூலத் தொகையை விளக்குவதுடன், இது பொதுவாக வயது, பணிக்காலம் மற்றும் ஊதியம் போன்ற ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட காரணிகளை அடிப்படையாகக் கொண்டதாகும். ஆயினும், 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டத்திற்கமைய, ஊழியர் ஒருவருக்குப் பணிக்கொடை வழங்கும் பொறுப்பானது, ஐந்து ஆண்டுகள் தொடர்ச்சியான சேவையை நிறைவு செய்த பின்னரே எழுகிறது. இந்தப் பொறுப்பிற்காக இலங்கை மருத்துவ மன்றம் வெளி நிதியுதவியை வழங்கவில்லை.

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்
**2024 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்காக**

**(ஆ) குறித்துரைக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம் - ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம்**

குறிப்பிட்ட சட்ட ஒழுங்கு விதிகளுக்கமைய ஊழியர்கள் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றின் பங்களிப்புக்கான தகைமையைப் பெற்றுக்கொள்கின்றனர். இவை வருமானக் கூற்றில் செலவாக இனங்கண்டு கொள்ளப்படுகின்றது. இலங்கை மருத்துவ மன்றத்தினால் (SLMC) ஊழியர்களின் சம்பளத்திலிருந்து முறையே 15% மற்றும் 3% ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியங்களுக்கான பங்களிப்பு வழங்கப்படுகின்றது.

### 2.3.2.4. நடைமுறை மற்றும் ஒத்திவைக்கப்பட்ட வரி

வருமான வரிக்கான செலவு, நடைமுறை மற்றும் ஒத்திவைக்கப்பட்ட வரிகளை உள்ளடக்கியுள்ளது. அது இலாப நட்டக் கணக்கில் இனங்கண்டுகொள்ளப்படுகின்றது.

**(அ) நடைமுறை வரி**

நடைமுறை வரிக்கான நிதி ஏற்பாடு, 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் மற்றும் அதன் பின்னரான 2022 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி (திருத்தப்பட்ட) சட்டங்களின் ஊடாக திருத்தப்பட்ட பிரகாரம் கணக்கிடப்பட்டுள்ளது.

**(ஆ) ஒத்திவைக்கப்பட்ட வரி**

நிதி அறிக்கைப்படுத்தல் நோக்கங்களுக்காக சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் ஏற்புப் பெறுமதிகள் மற்றும் வரிவிதிப்பு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் தொகைகளுக்கும் இடையிலான தற்காலிக வேறுபாடுகளின் மீது ஒத்திவைக்கப்பட்ட வரி இனங்கண்டுகொள்ளப்படுகிறது.

பயன்படுத்தப்படாத வரி நட்டங்கள், பயன்படுத்தப்படாத வரி வரவுகள் மற்றும் கழிக்கக்கூடிய தற்காலிக வேறுபாடுகளுக்கு, எதிர்காலத்தில் வரி விதிக்கக்கூடிய இலாபங்கள் கிடைக்கும் என்பதற்கு சாத்தியக்கூறு இருக்கும் அளவிற்கு மாத்திரமே ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள் இனங்காணப்படுகின்றன. ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள் ஒவ்வொரு அறிக்கைப்படுத்தல் தேதியிலும் மதிப்பாய்வு செய்யப்படுவதுடன், தொடர்புடைய வரி அனுகூலத்தை அடைந்துகொள்ள முடியுமென மேலும் சாத்தியம் இல்லாத அளவுக்கு அந்த சொத்துக்கள் கழிக்கப்படும். எதிர்காலத்தில் வரி விதிக்கக்கூடிய இலாபங்கள் கிடைக்கும் என்பதற்கு சாத்தியக்கூறு இருக்கும்போது, அத்தகைய குறைப்புகள் மீளப்பெறப்படுகின்றன.

இனங்கண்டு கொள்ளப்படாத ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள் ஒவ்வொரு அறிக்கைப்படுத்தல் தேதியிலும் மீள் மதிப்பீடு செய்யப்படுவதுடன், அந்த சொத்துக்களை பயன்படுத்திக்கொள்ள முடியுமான வகையில் எதிர்காலத்தில் வரி விதிக்கக்கூடிய இலாபங்கள் கிடைப்பதற்கான சாத்தியங்களைக் கவனத்திற்கொண்டு அந்த அளவிற்கு மாத்திரம் இனங்கண்டுகொள்ளப்படுகின்றது. அறிக்கைப்படுத்தல் தேதிக்குள் விதிக்கப்பட்ட அல்லது குறிப்பிடத்தக்களவில் விதிக்கப்பட்ட வரி வீததங்களைப் பயன்படுத்தி, தற்காலிக வேறுபாடுகளை மீளப்பெறுவதற்குப் பொருந்தும் என எதிர்பார்க்கப்படும் வரி விகிதங்களின் அடிப்படையில் ஒத்திவைக்கப்பட்ட வரி அளவிடப்படுகிறது. ஒத்திவைக்கப்பட்ட வரி அளவிடப்படும்போது, அறிக்கைப்படுத்தும் திகதியன்று நிறுவனம் தனது சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் ஏற்புப் பெறுமதியை அறவிட்டுக்கொள்வதற்கு அல்லது தீர்ப்பதற்கு எதிர்பார்க்கின்ற விதத்திற்கமைய எழுகின்ற வரி விளைவுகளைப் பிரதிபலிக்கின்றது.

இலாபம் அல்லது நஷ்டத்திற்கு புறம்பாக இனங்காணப்படும் உருப்படிகள் தொடர்பான ஒத்திவைக்கப்பட்ட வரி, இலாபம் அல்லது நஷ்டத்திற்கு புறம்பாக இனங்காணப்படுகிறது. ஒத்திவைக்கப்பட்ட வரி உருப்படிகள் அவற்றின் அடிப்படைப் பரிவர்த்தனையுடனான தொடர்பைப் பொறுத்து, ஏனைய விரிவான வருமானத்தில் அல்லது நேரடியாக உரிமைகளின் கீழ் இனங்கண்டுகொள்ளப்படுகின்றன. நடைமுறை வரிச் சொத்துக்கள், நடைமுறை வரிப் பொறுப்புகளுக்கு எதிராக பதலீடு செய்வதற்காக சட்டப்பூர்வமாக வலுப்பெறக்கூடிய உரிமையொன்று நிலவினால் மற்றும் ஒத்திவைக்கப்பட்ட வரிகள் ஒரே வரிக்குட்பட்ட நிறுவனம் மற்றும் ஒரே வரிவிதிப்பு அதிகாரத்துடன் தொடர்புடையதாக இருந்தால், ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்களும் ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்புகளும் பதிலீடு செய்யப்படுகின்றன.

**ஒத்திவைக்கப்பட்ட வரிகளுடன் தொடர்புடைய குறிப்பிடத்தக்க முடிவுகள்**

அந்த நட்டங்களைப் பதிலீடு செய்துகொள்வதற்கு முடியுமான வகையில் எதிர்காலத்தில் வரி விதிப்பதற்கு முடியுமான இலாபங்கள் கிடைப்பதற்கான சாத்தியத்தைக் கவனத்திற்கொண்டு அந்த அளவிற்கு மாத்திரமே பயன்படுத்தப்படாத வரி இழப்புகளுக்காக ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள் இனங்காணப்படுகின்றன. எதிர்கால வரி விதிப்பதற்கு முடியுமான இலாபங்கள் கிடைப்பதற்கு முடியுமான காலப் பகுதி மற்றும் அதன் அளவைப் போன்றே எதிர்கால வரி திட்டமிடல் உத்திகளின் அடிப்படையில், இனங்கண்டுகொள்ள முடியுமான ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்களின் அளவைத் தீர்மானிப்பதற்காக குறிப்பிடத்தக்க முகாமைத்துவத் தீர்வுகள் தேவைப்படுகிறது.

### 2.3.3 வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனை

#### 2.3.3.1. பரிவர்த்தனை மற்றும் மீதிகள்

அனைத்து அந்நிய செலாவணி பரிவர்த்தனைகளும் செயற்படு பயன்பாட்டு நாணயத்திற்கு மாற்றப்படுகின்றன. இலங்கை மருத்துவ மன்றத்தினால் செயல்பாட்டு நாணயம் தீர்மானிக்கப்படுவதுடன், இலங்கை மருத்துவ மன்றத்தின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள உருப்படிகள் அந்த செயற்படு பயன்பாட்டு நாணயத்தைப் பயன்படுத்தி அளவிடப்படுகின்றன. அந்நிய செலாவணிகளில் செய்யப்படும் பரிவர்த்தனைகள், அந்தப் பரிவர்த்தனை முதன்முதலில் இனங்கண்டுகொள்ளப்படுவதற்கான தகைமைகளைப் பெற்றுக்கொள்ளும் தேதியில் தொடர்புடைய செயற்படு பயன்பாட்டு நாணயத்தின் உடனடி செலாவணி வீதங்களின் (spot rates) கீழ் இலங்கை மருத்துவ மன்றத்தினால் ஆரம்பத்தில் அறிக்கைப்படுத்தப்படுகின்றது. அந்நிய செலாவணிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், அறிக்கைப்படுத்தப்படும் தேதியில் நிலவுகின்ற உடனடி செலாவணி வீதங்களுக்கமைய செயற்படு பயன்பாட்டு நாணயத்திற்கு மீண்டும் மாற்றப்படுகின்றன.

வெளிநாட்டு நாணயத்தினால் வரலாற்றுக் கிரய அடிப்படையில் அளவிடப்படும் நிதியல்லாத உருப்படிகள், ஆரம்ப பரிவர்த்தனைகளின் தேதியன்று நிலவிய செலாவணி வீதங்களைப் பயன்படுத்தி மாற்றப்படுகின்றன. நிதியல்லாத சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், தொகைகள் ஆரம்பத்தில் அந்தப் பெறுமதிகள் நிர்ணயிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் நிலவிய செலாவணி வீதங்களைப் பயன்படுத்தி மாற்றப்படுகின்றன. அந்நிய செலாவணி மாற்றங்கள் வேறுபாடுகள் பொதுவாக இலாப நட்டக் கூற்றில் இனங்கண்டுகொள்ளப்படுகின்றன.

**விரிவான வருமானக் கூற்று**

## 2.3.4 வருமானத்தை இனங்கண்டுகொள்ளல்

### 2.3.4.1. வருமானம்

லங்கை மருத்துவ மன்றத்தின் வருமான வழிகள், "வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்கள் மூலம் கிடைக்கும் வருமானம்" குறித்த இலங்கை நிதி அறிக்கைப்படுத்தல் தரநிலை 15 (SLFRS 15) இற்கு இணங்க இனங்கண்டுகொள்ளப்படுவதுடன், அதற்கிணங்க இலங்கை மருத்துவ மன்றம் தனது பங்குதாரர்களுக்குச் சேவைகளை வழங்குவதன் மூலம் பெற எதிர்பார்க்கும் தொகையைப் பிரதிபலிக்கும் தொகையில் வருமானத்தை இனங்கண்டுகொள்ளல் கணக்கீட்டிற்காக SLFRS 15 ஐந்து கட்டங்களிலான மாதிரியொன்றை நிறுவியுள்ளதுடன், அந்தத் தரநிலையின்படி செயலாற்றுகை கடப்பாட்டை திருப்திகரமாக நிறைவேற்றியதன் பின்னர் வருமானம் இனங்கண்டுகொள்ளப்படும். பங்குதாரர்கள் (முக்கியமாக மாணவர்கள் மற்றும் உறுப்பினர்கள்) இலங்கை மருத்துவ மன்றத்தினால் வழங்கப்படும் அனுகூலங்களை ஒரேயடியாகப் பயன்படுத்திக்கொண்டு நுகரும்போது மற்றும் நிறைவு செய்யப்பட்ட செயலாற்றுகைக்காக கட்டணத்தைப் பெறுவதற்கு இலங்கை மருத்துவ மன்றத்திற்கு அமுல்படுத்தக்கூடிய உரிமை இருக்கும்போது வருமானம் இனங்கண்டுகொள்ளப்படல் கால ஓட்டத்துடன் நிகழுமென இலங்கை மருத்துவ மன்றம் எதிர்பார்ப்பதுடன், அவ்வாறில்லையெனில் இலங்கை மருத்துவ மன்றத்தின் வருமானம் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் இனங்கண்டுகொள்ளப்படும்.

கீழுள்ள அட்டவணை ஊடாக, இலங்கை நிதி அறிக்கைப்படுத்தல் தரநிலை 15 (SLFRS 15) இற்கு வருமான வழிகள் மற்றும் செயலாற்றுகைக் கடப்பாடு நிறைவு செய்யப்படலின் அடிப்படையில் வருமானம் இனங்காணப்படல் பற்றிய விபரம் வழங்கப்படும்.

| வருமான வழி | வருமான விபரம் | வருமானத்தை இனங்கண்டுகொள்ளல் |
|---|---|---|
| பதிவு செய்துகொள்ளல் | சுகாதாரத் துறை தொழில் வல்லுநர்களைப் பதிவு செய்தல் என்பது இலங்கை மருத்துவ மன்றத்தின் முக்கியப் பணிகளில் ஒன்றாகும். அது மொத்தம் 19 வகையான சுகாதார தொழில் வல்லுநர்களைப் பதிவு செய்கிறது. மேலும், முறையே 29 மற்றும் 43 பிரிவுகளின் கீழ் பதிவு செய்யப்பட்ட மருத்துவ நிபுணர்கள் மற்றும் பல் மருத்துவ நிபுணர்களுக்காகத் தனித்தனிப் பதிவுப் பதிவேடுகள் பராமரிக்கப்படுகின்றன. | சுகாதாரத் துறை தொழில் வல்லுநர்களின் பதிவு தொடர்பாகப் பெறப்படும் கட்டணங்கள், மன்றத்தால் அங்கீகரிக்கப்படும் நேரத்தில் வருமானமாகக் கருதப்படுகின்றது. மேலும், சம்பந்தப்பட்ட தரப்பினரின் சேவைகளுக்குச் செயலாற்றுகை பொறுப்பு நிறுவப்படுவதால், அத்தகைய விண்ணப்பங்களின் அடிப்படையில் அவை செலுத்தப்பட வேண்டும். |
| பதிவைப் புதுப்பித்தல் | அறிக்கைப்படுத்தல் காலப் பகுதியில் இலங்கை மருத்துவ மன்றத்தினால் ஒவ்வொரு ஐந்தாண்டுகளுக்கும் ஒரு முறை பதிவுகளைப் புதுப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>அ) மருத்துவ தொழில் வல்லுநர்கள், பல் மருத்துவர்கள் மற்றும் பிரிவு 41<br><br>ஆ) துணை மருத்துவம் | தொடர்புடைய நிதிக் காலப் பகுதிகான பதிவைப் புதுப்பித்தல் தொடர்பாக அங்கத்தவர்களிடமிருந்து அறவிடப்பட்ட கட்டணங்கள், பங்களிப்பு செலுத்த வேண்டிய நிதிக் காலத்திலேயே செயல்திறன் கடப்பாடு பூர்த்தி செய்யப்படுவதால், காலப்போக்கில் வருமானமாக அங்கீகரிக்கப்படுகின்றது.<br><br>எதிர்கால காலப் பகுதிகளுடன் தொடர்பாக அறவிடப்பட்ட பங்களிப்புத் தொகை, நடைமுறை மற்றும் நடைமுறை அல்லாத பொறுப்புகளின் கீழ் ஒத்திவைக்கப்பட்ட வருமானமாக நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்படுகின்றன. |

| | | |
|---|---|---|
| **பதிவை மீளமைத்தல்** | நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் தங்கள் பதிவைப் புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு மருத்துவ கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 105) ஏற்பாடுகளின்படி உரிய நடைமுறையைப் பின்பற்றி தங்கள் பதிவை மீளமைத்துக் அனுமதிக்கப்படுகிறார்கள். இலங்கை மருத்துவ மன்றத்தினால் அங்கத்தவர் பதிவுகளுக்காக எதிர்வரும் ஐந்து ஆண்டு காலம் உள்ளடக்கப்படும் பிரகாரம் பதிவு மீளமைப்புக் கட்டணங்களை முன்கூட்டியே அறவிடப்படுகிறது. | அங்கத்தர்களிடமிருந்து அறவிடப்படும் மற்றும் தொடர்புடைய நிதிக் காலப் பகுதிக்கு செல்லுபடியாகும் பதிவு மீளமைப்புக் கட்டணங்கள், பங்களிப்பு செலுத்த வேண்டிய நிதிக் காலம் முழுவதும் செயல்திறன் கடப்பாடு நிறைவேற்றப்படுவதால், காலப்போக்கில் வருமானமாக இனங்காணப்படுகின்றது.<br><br>எதிர்கால காலப் பகுதிகளுடன் தொடர்பாக அறவிடப்படும் பங்களிப்புத் தொகை, நடைமுறை மற்றும் நடைமுறை அல்லாத பொறுப்புகளின் கீழ் பதிவு மீளமைப்புக்காக முன்கூட்டியே பெறப்பட்ட கட்டணங்களாக ஒத்திவைக்கப்பட்ட வருமானமாக நிதி நிலைமைக் கூற்றில் இனங்கண்டுகொள்ளப்படுகின்றது. |
| **நிபுணத்துவ மருத்துவர் பதிவு** | இலங்கை மருத்துவ மன்றத்தின் நிபுணத்துவ மருத்துவர்களின் பதிவு என்பது, மருத்துவ கட்டளைச் சட்டத்தின் மற்றொரு பிரிவின் (பிரிவுகள் 39அ மற்றும் 39 ஆ) கீழ் செயல்படும் ஒரு தனி செயல்முறையாகும். | நிபுணத்துவ மருத்துவர்களின் பதிவு தொடர்பாகப் பெறப்படும் கட்டணங்கள், மன்றத்தின் அங்கீகாரம் வழங்கப்படுகின்ற மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினரின் சேவைகளுக்கான செயல்திறன் கடப்பாடு நிறுவப்பட்டுள்ளமையினால் அத்தகைய விண்ணப்பங்களுக்கான கொடுப்பனவுகள் செலுத்தப்பட வேண்டிய ஒரு குறிப்பிட்ட நேரத்தில் வருமானமாக இனங்காணப்படுகின்றது. |
| **மேலதிக தகைமைகளை பதிவு செய்தல்** | இலங்கை மருத்துவ மன்றத்தினால் மேலதிக தகுதிகளுக்கான பதிவு விண்ணப்பங்கள் தயாரித்தல் மற்றும் அங்கீகாரம் வழங்கப்படுகின்றது. | மேலதிக தகுதிகளுக்கான பதிவு தொடர்பாகப் பெறப்படும் கட்டணங்கள், மன்றத்தின் ஒப்புதல் வழங்கப்பட்டு, சம்பந்தப்பட்ட தரப்பினரின் சேவைகளுக்கான செயல்திறன் கடப்பாடு நிறுவப்பட்டுள்ளமையினால் அத்தகைய விண்ணப்பங்களுக்கான கொடுப்பனவுகள் செலுத்தப்பட வேண்டிய ஒரு குறிப்பிட்ட நேரத்தில் வருமானமாக இனங்காணப்படுகின்றது. |

| | | |
|---|---|---|
| **தற்காலிகப் பதிவு** | இலங்கை மருத்துவ மன்றம் தற்காலிகப் பதிவுகளுக்கான விண்ணப்பங்களைப் பரிசீலித்து அங்கீகரிக்கிறது. | தற்காலிகப் பதிவுகள் தொடர்பாகப் பெறப்படும் கட்டணங்கள், மன்றத்தின் அங்கீகாரம் வழங்கப்படுகின்ற மற்றும் தரப்பினரின் சேவைகளுக்கான செயல்திறன் கடப்பாடு நிறுவப்பட்டுள்ளமையினால், அத்தகைய விண்ணப்பங்களுக்கான கட்டணம் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் செலுத்தப்பட வேண்டியிருக்கும் போது வருமானமாகக இனங்காணப்படுகின்றது. |
| **பரீட்சைகள்** | இலங்கை மருத்துவ மன்றமானது ஆண்டுக்கு இருமுறை மருத்துவத் தொழிலில் ஈடுபடுவதற்காக பதிவுப் பரீட்சை (ERPM) மற்றும் பல் அறுவை சிகிச்சை மருத்துவத் தொழிலில் ஈடுபடுவதற்காக பதிவுப் பரீட்சை (ERPDS) ஆகியவற்றை நடாத்துகிறது. | பரீட்சைகளுக்கான கட்டணங்கள் அனுமதிப் பத்திரங்களை தயாரித்தல், செயல்திறன் கடப்பாட்டைத் திருப்திகரமாக நிறைவேற்றியதன் பின்னர் வருமானமாக இனங்கண்டுகொள்ளப்படுகின்றது. |
| **வெளிநாட்டு மருத்துவக் கல்லூரிகளை அங்கீகரித்தல்** | இலங்கை மருத்துவ மன்றத்தின் அங்கீகரிப்புக்காக வெளிநாட்டு மருத்துவ மற்றும் பல் மருத்துவக் கல்லூரிகளை மதிப்பீட்டிற்குட்படுத்துவதற்காக, இலங்கை மருத்துவ மன்றம் இரண்டு கட்ட (படிவம் 1 மற்றும் படிவம் 2) மதிப்பீட்டுச் செயல்முறையைப் பின்பற்றுகிறது. | வெளிநாட்டு மருத்துவக் கல்லூரிகளின் அங்கீகாரம் தொடர்பாகப் பெறப்படும் கட்டணங்கள், அந்தப் பல்கலைக்கழகங்களினால் அறவிடப்படும் நிதிக் காலப் பகுதிக்காக பங்களிப்பு செலுத்தப்பட வேண்டிய நிதிக் காலத்தில் நிறைவேற்றப்பட்ட செயல்திறன் கடப்பாட்டின் விளைவாக, காலப்போக்கில் வருமானமாக அங்கீகரிக்கப்படுகின்றன.<br>எதிர்காலப் பகுதிகளுடன் தொடர்பாகப் பெறப்பட்ட பங்களிப்புகள், நிதி நிலைமைக் கூற்றில் பொறுப்புகளின் கீழ் முன்கூட்டியே பெறப்பட்ட கட்டணங்களாக ஒத்திவைக்கப்பட்ட வருமானமாகக் காட்டப்படுகின்றன. |
| **சான்றிதழ்கள் வழங்குதல்** | இலங்கை மருத்துவ மன்றத்தினால் சிறந்த தொழில் தர சான்றிதழுக்கான (Certificates of Good Standing - CGS) விண்ணப்பங்களைத் தயாரித்தல் மற்றும் அங்கீகரிக்கப்படுகின்றது. | சான்றிதழ்கள் வழங்குவதன் மூலம் கிடைக்கும் வருமானம், சான்றிதழை வழங்கும் மற்றும் அதற்கான கட்டணம் பெறப்படும்போது, வருமானமாக இனங்காணப்படுகிறது. |
| **மருத்துவ சரிபார்ப்புகள்** | இலங்கை மருத்துவ மன்றத்தினால் சரிபார்ப்புகளுக்கான விண்ணப்பங்களைத் தயாரித்தல் மற்றும் அங்கீகரிப்பு மேற்கொள்ளப்படுகின்றது. | சான்றிதழ்கள் வழங்குவதன் மூலம் கிடைக்கும் வருமானம், சான்றிதழை வழங்கும் மற்றும் அதற்கான கட்டணம் பெறப்படும்போது, வருமானமாக இனங்காணப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| **ஏனைய சேவைகள்** | இலங்கை மருத்துவ மன்றத்தினால் தகவல் மாற்றங்களுக்கான விண்ணப்பங்கள், ஆவணங்களின் சான்றளிக்கப்பட்ட பிரித்தெடுப்புக்களுக்கான கோரிக்கைகள் மற்றும் விசேட சந்தர்ப்பங்களின்போது திருத்தப்பட்ட / இற்றைப்படுத்தப்பட்ட சான்றிதழ்களை மீண்டும் வழங்குவதற்கான கோரிக்கைகளுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | ஏனைய சேவைகளிலிருந்து வரும் வருமானம், அந்தச் சேவை வழங்கப்பட்டு அதற்கான கட்டணம் பெறப்படும் குறிப்பிட்ட நேரத்தில் வருமானமாக இனங்காணப்படுகின்றது. |
| **நிலுவைத் தொகை, தண்டனை மற்றும் தண்டப் பணம்** | உரிய தேதிக்குப் பிறகு பெறப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பான நிலுவைகள், அபராதங்கள் மற்றும் தண்டப் பணம் | உரிய தேதிக்குப் பிறகு பெறப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பான நிலுவைகள், அபராதங்கள் மற்றும் தண்டப் பணம் அந்த கிடைத்ததன் பின்னர் இனங்கண்டுகொள்ளப்படும். எனவே, வருமானம் குறிப்பிட்ட நேரத்தில் இனங்கண்டு கொள்ளப்படுகிறது. |
| **நானாவித வருமானங்கள்** | மேலே குறிப்பிடப்படாத வேறு எந்தவொரு வருமானம் | மேலே குறிப்பிடப்படாத வேறு எந்த வருமானமும் அட்டுறு அடிப்படையில் இனங்காணப்படுகிறது. |

### 2.3.4.2. நிதிசார் வருமானம்:

இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் (SLFRS) 09 - நிதிசார் உபகரணங்கள் தரத்திற்கு இணங்க பயன்மிக்க வட்டி வீத முறையைப் (EIR) பயன்படுத்தி இனங்காணப்பட்ட வட்டி வருமானத்தை நிதிசார் வருமானம் உள்ளடக்கியுள்ளது.

### 2.3.4.3. இலாபம் மற்றும் நட்டம்

முதலீடுகள் உட்பட சொத்து, பொறிகள் மற்றும் உபகரணங்கள் போன்றே ஏனைய நடைமுறையல்லாத சொத்துக்களை புறத்தொதுக்குவதனூடாக மற்றும் வெளிநாட்டு நாணயங்களை மாற்றுவதனூடாக எழும் வருமானத் தன்மையிலான தேறிய இலாபங்கள் மற்றும் நட்டங்கள், புறத்தொதுக்குவதன் மூலம் கிடைக்கும் வருமானத்தின் மூலம் அந்தச் சொத்துக்களின் ஏற்பு மதிப்பு மற்றும் அது தொடர்பான விற்பனைச் செலவுகளைக் கழித்த பிறகு, விரிவான வருமான கூற்றில் பதியப்படுகின்றது.

### 2.3.4.4. ஏனைய வருமானங்கள்

ஏனைய வருமானங்கள் அட்டுறு அடிப்படையில் இனங்காணப்படுகின்றது.

### 2.3.5. செலவை இனங்கண்டுகொள்ளல்

இலங்கை மருத்துவ மன்றத்தின் செயற்பாடுகளை மேற்கொள்ளும்போது ஏற்படும் செலவுகள், அவை ஏற்படும் காலக்கட்டத்திலேயே விரிவான வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளது. இலங்கை மருத்துவ மன்றத்தின் நிர்வாகம், செயற்பாடுகளை எதிர்பார்க்கப்படும் மட்டத்தில் நிறைவேற்றுவதற்காக சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மறுசீரமைப்பு மற்றும் பராமரிப்பின்போது ஏற்படும் ஏனைய செலவுகள் அட்டுறு அடிப்படையில் கணக்கிடப்பட்டு விரிவான வருமானக் கூற்றில் பற்று வைக்கப்படுகின்றன. செலவினங்களின் தன்மையின் முறையைப் பயன்படுத்தி விரிவான வருமானக் கூற்றில் செலவுகள் முன்வைக்கப்படுகின்றன.

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

**2024 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்காக**

**(அ) கருத்திட்டச் செலவுகள்**

